விலை சதம் 5

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்,
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

பக்கங்கள் 4

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	„	12-00
1 வருடச் சந்தா	„	24-00

மானேஜர்
"சுதந்திரன்"
194 A தட்டாரத் தெரு கொழும்பு

Phone 3411

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு சர்வஜித்து ஆடு புரட்டாசி மீ 18உ சனிக்கிழமை — Colombo, October, 4 1947 — ஹிஜிரி 1366 துல்கஃதா பிறை 8 | இதழ் 123

புதிய மந்திரி சபையின் முதல் கூட்டம்

அக்டோபர் 8-ம் தேதி பிரதம மந்திரி கொள்கையை வெளியிடுவார்

பாராளுமன்ற விவாதக் கூட்டத்தை பெப்ரவரி வரை தாமதப்படுத்த சதியாலோசனையா?

["சுதந்திரன்" அரசியல் நிருபர்]

கொழும்பு, அக். 4

புதிய "கபினட்" மந்திரி சபையின் முதலாவது கூட்டம் அக்டோபர் மாதம் எட்டாந்தேதிக்கென நியமிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. அக் கூட்டத்தில் இலங்கையின் பிரதம மந்திரி திரு. டி. எஸ். சேனநாயக்கா தம் அரசாங்கத்தின் எதிர்காலக் கொள்கைகளை வெளியிடுவாரென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

"சேனட்" சபைக் கட்டிடத்தில், கபினட் அறையில் இக் கூட்டம் நடைபெறுமென்றும் அன்று சகல மந்திரிகளும் அவர்களின் காரியதரிசிகளும் பிரசன்னமாயிருப்பார்களாம்.

மந்திரி சபையினர், "கபினட்" காரியதரிசியை நியமித்த பின்பே முறைப்படி வேலை செய்யத் தொடங்குவார்கள் மந்திரி சபைக் காரியதரிசியே மந்திரி சபைக் கூட்டங்களுக்கு ஒழுங்கு செய்யவும் கூட்ட நிகழ்ச்சிக் குறிப்புகளை நிரல் படுத்தி அறிவிக்கவும் சோல்பரித் திட்டப்படி அதிகாரமுள்ளவராவார்.

முதலாவது பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபையின் கூட்டம் இந்த அக்டோபர் மாதம் 14-ம் தேதிக்கென நியமிக்கப்பட்டிருக்கிறது.

அன்று ஸ்பீக்கர், உதவி ஸ்பீக்கர், சமூடிகளின் பிரதிநிதித் தலைவர், 15 மேல் சபைப் பிரதிநிதிகள் முதலியவர்களைத் தெரிவு செய்ததன் பின்னர் பிரதிநிதிகள் சபையின் கூட்டம் நவம்பர் மாதம் 25-ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படும்

நவம்பர் மாதம் 25-ம் தேதியன்றுதான் பாராளுமன்ற சபையின் உத்தியோக பூர்வமான சிறப்பு விழா நடத்தப் பெறுமென அறிவிப்படுகின்றது.

அன்று பிரதிநிதிகள் சபை, செனட் சபை ஆகிய இருசபைகளும் கூடும். கவர்னர் அக்கூட்டத்தில் பேசுவார்.

கவர்னர் பாராளுமன்ற பிரதிநிதிகள் சபைக்கு பின்வருபவர்களை நியமன அங்கத்தவர்களாக நியமிப்பார் என அறியக் கிடக்கிறது:- திராவளர்கள் எப். எச். கிரிபித்; ஜி. ஆர் விட்பி; எஸ். ஏ. பேக்மன்; ஈ எப். என். கிரேஷியன் கே. ஸி; ஜே. ஒவிறே மாட்டினஸ்; மேஜர். ஜே. டபிள்யூ. ஒல்ட் பீல்ட்.

பாராளுமன்ற எதிர்கட்சியினர் யாவரும் ஒற்றுமையாக ஒரு மாற்று அரசாங்கத்தை ஏற்படுத்த ஏற்பாடுகள் செய்து வருவதாக அறியப்படுகிறது

பாராளுமன்ற சபையில் பெப்ரவரி மாதம் வரைக்கும் எதிர்கட்சியினர் விவாதம் நடத்த இடங்கொடாது தொடர்ந்து சபைக் கூட்டங்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று யூ என். பிக் கட்சியினரும் பிரதம மந்திரி திரு. டி. எஸ். சேனநாயக்காவும் கருமங்கள் ஆற்ற முற்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

மற்றுமோர் தேர்தல் ஆட்சேபனை மனு

கொழும்பு, அக். 3

பாராளுமன்றக்கின் மத்சகம பிரதிநிதி திரு. வீமன் பெரேராவின் தேர்தலை ஆட்சேபித்து மத்துமம வாசிகளான திரு. டி. சமாவீராவும் திரு. டபிள்யூ ஏ ரொமானிசும் இன்று சுப்ரீம் கோர்ட்டில் ஒரு மனு தாக்கல் செய்திருக்கிறார்கள் சில பிரதிநிதிகளின் தேர்தலை ஆட்சேபித்து இதுவரை தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களில் இது ஒன்பதாவது மனுவாகும்.

விவாகரத்து வழக்கு

திரு. டி. டி. பெரேரா இரண்டாவது பிரதிவாதி

கொழும்பு, அக். 3

தலங்கமா வாசியான திரு. டபிள்யூ ஜெச் கொக் தன் மனைவி மீது விபசாரக் குற்றச்சாட்டி கொழும்பு டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் ஓர் விவாகரத்து வழக்குத் தொடர்ந்திருக்கிறார் இவ்வழக்கில் இன்-கம-டாக்ஸ் கமிஷனர் திரு. டி. டி. பெரேரா இரண்டாவது பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

இலங்கை உத்தியோகஸ்தருக்குக் கென்யா நியமனம்

கொழும்பு, அக். 4

உதவிப் பிரதம காரியதரிசியான திரு. ஏ. ஸ். எம். ஹிங்லீலி ஸி. எஸ் கென்யாவில் அரசாங்க உதவிக் காரியதரிசி பதவி ஒன்றுக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவ்விஷயம் பிரதம காரியதரிசி இலாகாவால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் பிரஸ்தாபிக்கப்பட்டுளளது.

கடலில் மூழ்கி மரணம்

கொழும்பு, அக். 4

கால்பேஸில் கடலில நீராடிக் கொண்டிருந்த வில்லியம் மபட் என்பவர் நேற்று முன்தினம் கடலால் அடித்துக்கொண்டு போகப்பட்டார்

அவர் உடல் நேற்றுக் காலை கடற்கரையில் திரையால் கொண்டுவந்து ஒதுக்கப்பட்டது. காலஞ்சென்ற மபட ஒரு கப்பல் தொழிலாளி என்று தெரிகிறது.

துப்பாக்கிப் பிரயோக வழக்கு

எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், செப். 30

யாழ்ப்பாணம் கீழ்நீதிஸ்தலத்தில் நீதிபதி திரு. எம் எம். மஹ்றூப் முன்னிலையில் ஆறுமுகம் வேலுப்பிள்ளை, கந்தையா குமாரசுவாமி, வேலுப்பிள்ளை ஆறுமுகம் ஆகிய மூவர் மீதும் கடந்த ஏப்ரல் மாதம் 30-ம் தேதியன்று சட்ட விரோதமாகக் கூட்டங் கூடியதாகவும், கிருஷ்ணன், கந்தையா எனனும் இருவரை துப்பாக்கியால சுட்டுக் கொலை செய்ய எத்தனித்ததாகவும் முதலிய ஒன்பது குற்றஞ் சாட்டி யாழ்ப்பாணம் ஏபாலசாரால் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக் கெடுக்கப்பட்டு இன்று தீர்ப்பளிக்கப்பட்டது.

வழக்காளி தரப்பில் யாழ்ப்பாணம் போலிஸ நிலையத்தைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் ஏ. டி. ரொட்றிகோவும், கான்ஸ்டபிள் சிவலிங்கமும், இன்னும் ஒருவரும் சாட்சியங் கூறினர்.

முதலாம்எதிரியாகிய வேலுப்பிள்ளை கூறியதாவது:-

நான் வடஇலங்கை ஓர்னிஸ கம்பெனியில் டிராபிக் மானேஜராகக் கடமையாற்றி வருகின்றேன். கம்பெனியில எனக்குப் பங்குண்டு கடந்த ஏப்ரல் மாதம் 30-ம் தேதியன்று இரவு 8 மணி ளவில் எனது பஸ்ஸைச் செலுத்திக் கொண்டு வலிகாமம் மேற்கு பஸ் கம்பெனி மானேஜர் திரு. சொக்கலிங்கத்தைக் காண வேண்டிச் சென்றேன், அவரது வீடு பஸ் தொழிலாளர் யூனியன் காரியாலயத்திற்கு எதிராக இருக்கின்றது. அன்று பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தஞ் செய்திருந்தமையால் அநேகர் ஆங்கு குழுமியிருந்தனர்

நான் பஸ்ஸை ஓட்டிக் கொண்டு சொக்கலிங்கத்தின் வீட்டைத் தாண்டி காங்கேசன் துறைரோட நாவலர்ரோட் சந்தியில் பஸ்ஸைத் திருப்பிவந்தேன். அப்பொழுது பஸ் வேகங் குறைவாகவே ஓட்டப்பெற்றது. காரணம், சொக்கலிங்கம் வீட்டின் முன்னால் தாமதிப்பதற்கு அப்பொழுது பஸ் தொழிலாளர் காரியாலயத்திற்கு முன்னாலிருந்தவர்கள் சென்ற பஸ் திரும்பி வருகின்றது' என்று சத்தமிட்டுக் கலவரம் எழுந்தார்கள். ஆகவே நான் பஸ்ஸை நிறுத்தாமல் ஓடினேன். பின்னால் ஒரு துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டது. எனக்குப் பக்கத்திலிருந்த சேனாதிராசா என்பவர் கல்லெறியால தாக்குண்டு விழப் போனார். அப்பொழுது நான் துவக்கை எடுத்து மேல நோக்கிச் சுட்டேன்.

பஸ்ஸைக் கலைத்துவந்த தொழிலாளர்கள் திரும்பி ஓடினார்கள்.

நீதிபதி எதிரிகளை விடுதலை செய்து வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

ஆப்பிரிக்கா செல்லும் கடிதங்கள்

கொழும்பு, அக். 4

அக்டோபர் 10-ம் தேதியன்று வரை தென்ஆப்பிரிக்காவுக்குக் கப்பல் மார்க்கமாகச் செல்லும் கடிதங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று தெரிகிறது. இதுபற்றி கட்டுக்கு மேழக்காப்பிரிகக் கடிதங்களும் அங்கீகரிக்கப்படும்.

கண்டியில் காந்தி ஜெயந்தி

"பொருளாதார சுதந்திரத்தை நாடும் மகாத்மா"

திரு. வி. வி. கிரி பேச்சு

கண்டி, அக். 3

"மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு போன்ற தலைவர்கள் வெறுமனே அரசியல் சுதந்திரம் பெற்று விட்டதால் மட்டும் திருப்தியடைந்து விடமாட்டார்கள். வேறு சில அரசியல் வாதிகள் "இது போதும்" என்று திருப்தி அடைவார்கள் காந்தி போன்ற தலைவர்களோ சம்பூரண சோஷியலிஸ ஜனநாயகத்துன் அடிப்படையான பொருளாதார விடுதலையை நாடி நிற்கிறார்கள். அத்தகைய விடுதலையே சமாதானத்தையும், செழிப்பையும் உறுதிப்படுத்தும்."

மேற்கண்டவாறு கண்டி போலிக்ஸ மண்டபத்தில் காந்திஜியின் 78-வது ஜெயந்தி விழாக் கூட்டத்தின் போது திரு. வி. வி. கிரி குறிப்பிட்டார்.

மேற்படி ஜெயந்தி விழா வை முன்னிட்டு வீதிகளில் வாழைநாப்பட்டு தோரணங்காரங்களுடன் செய்யப்பட்டிருந்தன. காந்திஜியின் திருவுருவப்படம் வீதிவழியே ஊர்வலமாக கூட்டத்திற்கு முன் எடுத்துச் செல்லப்பட்டது.

பார்லிமெண்ட் அங்கத்தினர்களான சௌமிய மூர்த்தி தொண்டமான், டி. எம் ராமானுஜம் ஆகியோரும் திருவாளர்கள் எச் ஏ. ஸி விக்கிரமரத்ன டி. பி. இலங்கரத்ன எஸ் கே. ராஜசிங்கம் முதலியோரும் பேசினார்கள்

பாரதி விழாவிற்கு இலங்கைப் பிரதிநிதிகள்

கொழும்பு, அக் 4

நேற்று நடந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ கமிட்டிக் கூட்டதில் திரு. பி என். திருநாவுக்கரசு அவர்களையும், மாஜி ஓடிட்டர் ஜெனரல் திரு. கே கனகரத்தினமவர்களையும் இம்மாதம் எட்டயாபுரத்தில் நடக்கவிருக்கும் பாரதி ஞாபகார்த்த வழிபாட்டுக்கு இலங்கைத் தமிழர் பிரதிநிதிகளாக அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

பிலிப்பைனில் காகித தொழிற்சாலை

மனிலா, அக். 2

தினம் 30 டன் உற்பத்தியாகக் கூடிய காகித தொழிற்சாலையை நிறுவ பிலிப்பைன சர்க்கார் அமெரிக்க கம்பெனியுடன் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள்.

விக்டோரியா ராணிக்கு ஜாகை மாற்றமா?

உருவச் சிலை அகற்றப்படுமாம்

டெலிஸ், அக். 2

1907-ம் ஆண்டு "ஐரிஷ் பிரஜை"களால் நிறுவப்பட்ட விக்டோரியா மகாராணியின் உருவச் சிலை லீலைடர் மாளிகையின் வாயிலில் இருந்து அகற்றப்படும் என்று தெரிகிறது லீலைடர் மாளிகையே அயர்லாந்துப் பாராளுமன்ற கூடடம் நடைபெறும் இடமாகும்.

உருவச் சிலை அகற்றப்படுவதற்குக் காரணம் மேற்படி கட்டிடத்தில் செய்யப்படவிருக்கும் சில மாற்றங்களேயாகும்.

அகற்றப்படும் உருவச் சிலையை என்னை செய்யப் போகிறார்கள் என்பது இதுவரை மர்மமாகவே இருக்கிறது. (ராயட்டர்

பிரிட்டிஷ் ராணுவ உத்தியோகஸ்தருக்கு நோட்டீஸ்

இந்தியாவுக்கு சுவிட்ஜர்லாந்து ஸ்தானிகர்

பம்பாய் வேலைநிறுத்தம் முடிந்தது

புதுடில்லி, அக் 2

இந்திய யூனியன், பாக்கிஸ்தான் அரசாங்கங்கள் பாக்கிஸ்தானிலும் இந்திய யூனியனிலும் கடமையாற்றிவரும் பிரிட்டிஷ் ராணுவ உத்தியோகஸ்தர்களுக்கு மூன்று மாத நோட்டீஸ் கொடுப்பதென்று தீர்மானித்துள்ளன. இக்கால எல்லையின் பின்னர் அவர்கள் தமது ஸ்தானங்களில் இருந்து விலகிக்கொள்ள வேண்டும்

ஐ. நா. ஸ்தாபனத்திற்கு இந்தியாவின் கட்டணம்

லேக்ஸ்ஸஸ், அக். 2

ஐக்கியதேச ஸ்தாபனத்தில் இந்தியாவும் பாக்கிஸ்தானும் தமது 1949-ம் வருட கட்டணம்பற்றிய பிரச்னையைப் புனராலோசனை செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளன 1948 கட்டணத்தில் 3 95 வீதம் என்றிருக்கும் அக்கட்டணம் பாக்கிஸ்தானுக்கும் இந்திய யூனியனுக்கும் இடையில பிரிக்கப்ப வேண்டும் என்று இந்தியப் பிரதிநிதி திரு. சுந்தரேசன் தமது கருத்தை வெளியிட்டார் பாக்கிஸ்தான் பிரதிநிதி ஜனாப் ஸாரூக் மேற்படி கருத்தையே தாமும் ஆதரிப்பதாகத் தெரிவித்தார்.

இந்தியாவிலும் சயாமிலும் சுவிஸ் ஸ்தானிகர்

பேர்ன், அக். 2

இந்தியாவிலும் சயாமிலும் சுவிட்ஜர்லாந்து தன் ஸ்தானிகர்களை நியமிக்கத் தீர்மானித்திருப்பதாக சுவிஸ் ரேடியோ இன்று குறிப்பிட்டது

பாக்கிஸ்தானுக்கு இந்தியக் கரி

பிரெட்டோரியா, அக் 2

டெயிலிமெயில் அரசியல் நிருபர் இந்தியா யூனியன் அரசாங்கம் பாக்கிஸ்தானுக்கு 40 ஆயிரம் டன் கரி கொடுத்துதவத் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கிறார் கராச்சியில் இருந்து அவசியமாகக் கரி தேவைப்பட்டதே இதற்குக் காரணம் என்று தெரிகிறது.

புயல் ஓய்ந்தது!

பம்பாய், அக். 2

பம்பாயில் நடந்துவந்த நெசவாலை வேலை நிறுத்தத்தை நிறுத்திவிட செங்கொடி கிரணி கம்கர் யூனியன் காரியக் கமிட்டி தீர்மானித்துள்ளது. நாளையே தொழிற்சாலைகளில் வேலை ஆரம்பிக்கும் எனத் தெரிகிறது. இந்த வேலை நிறுத்தத்தின் பயனாக 4 கோடி கெஜம் நெசவு நஷ்டமடைந்ததென்றும் தொழிலாளர் 74 லட்ச ரூபாய் நஷ்டமுற்றனர் என்றும் தெரிகிறது.

இந்திய சைனியம் தாக்கப்பட்டது

புதுடில்லி அக் 2

முஸ்லிம் அல்லாதார்களைப் பாதுகாப்புடன் கொண்டுவந்துகொண்டிருந்த இந்தியப் படடாளத்தைச் சேர்ந்த மூன்று இந்தியர்கள் பதிவிருந்து தாக்கிக் கொல்லப்பட்டதாகத் தெரிகிறது. அவர்களில் ஒருவர் மேஜர் பதவியை வகிப்பவராகும்.

இந்தோனேஷியாவில் இன்னும் போர்

பாதுகாப்பு கவுன்ஸில் தலைவருக்கு டாக்டர் கனி தந்தி

குடியரசுப் பிரதம மந்திரியின் அறிக்கை

டச்சு-அமெரிக்க தந்திரோபாயங்கள்

பட்டேவியா, அக் 2

இந்தோனேஷிய உதவிப் பிரதம மந்திரி ஏ. கே. கனி இன்று ஐக்கிய தேச ஸ்தாபனத்தின் பாதுகாப்பு கவுன்ஸில் தலைவருக்குக் கீழ்க்கண்ட தந்தியனுப்பியிருக்கிறார்:- இந்தோனேஷியாவில் இன்னும் கடுமையான போர் நடைபெறுகிறது புதிய நகரங்களையும் முக்கிய ரஸதாக்களையும் டச்சுக்காரர் கைப்பற்றியதும் அவைகளுக்கு வெகு தூரமுள்ள பிரதேசங்கள் யாவும் தங்களைச் சேர்ந்தவை என்று உரிமை பாராட்டுகிறார்கள். அதற்கான மாபெரும் போராட்டங்கள் நிகழ்கின்றன. கொளனேக்கூட்டத்தார் மாதிரியாய வரம்பின்றி டச்சுக்காரர்கள் நடப்பதுடன், அவர்கள் கைப்பற்றிய இந்தோனேஷிய பிரதேசங்களிலுள்ள குடியரசு அதிகாரிகளை துன்புறுத்துகின்றனர். அவர்கள் ஒரு கைப்பொம்மை அரசாங்கமமர்ப்படுத்தவும் அரசியல் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

பிரதமர் அறிக்கை

இந்தோனேஷிய பிரதமர் டாக்டர் அமிர் ஷாரிபுடன் குடியரசுத் தலைநகரிலிருந்து கீழ்க்கண்ட அறிக்கை வெளிவந்திருக்கிறார்:-

இந்தோனேஷிய குடியரசுப் பிரதேசங்களிலிருந்து டச்சுத் துருப்புகள் காலியானதான டச்சு சர்க்காருடன இந்தோனேஷிய சர்க்கார் சமரசப் பேச்சு ஆரம்பிக்க முடியும். சுமத்ராவின் ஏழக்குப் பகுதியில ஒரு பொம்மை அரசை டச்சு அதிகாரிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள் இந்தோனேஷிய குடியரசின் ஆதிபத்யத்தை டச்சு சர்க்கார் ஒப்புக் கொள்ள வேண்டும். உலக அபிப்பிராயம் எங்களுக்கு ஆதரவாக இருப்பதால் குடியரசு சர்க்கார் பலமுடையதாகவே இருக்கிறது மூன்று நாடுகளின் கமிஷன் நியாயமான தீர்ப்பளிக்குமென்று நாங்கள் நம்புகிறோம். அக்கமிஷன் சிங்கப்பூரில் விசாரணை நடத்த வேண்டுமென்பதை ஆதரிக்கிறோம்.

கிழக்கு சுமத்ராவில் பொம்மை அரசு

டச்சு அறிக்கை பின்வருமாறு தெரிவிக்கிறது:- சுமத்ராவின் கிழக்குக் கரை பிரதேசத்தில் பொது ஜனங்கள் வேண்டுகோளின்படி ஒரு தற்காலிக அரசாங்கம் நிறுவப்படுகிறது. இது சம்பந்தமாக கவர்னர் ஜெனரல் டாகடர் வான் மூக் ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறார். அக்கமிட்டி டச்சுக் காரருடன் ஒத்துழைத்த பின் அங்கு சுயேச்சை அரசாங்கம் நிறுவப்படும்.

கிழக்கு இந்தோனேஷியா பொம்மை அரசு

இவ்வாறாக நிறுவப்பட்ட கிழக்கு இந்தோனேஷியா பொம்மை அரசாங்கத்தின் மந்திரி சபை திருத்தியமைக்கப்படும் பொருட்டு ராஜினாமா செய்தது என்று டச்சு செய்தி அறிவிக்கிறது.

குடியரசுப் பிரதமர் இன்று ரேடியோவில் பேசியபோது, டச்சு சர்க்கார் லிங்கஜாதி ஒப்பந்தத்தை ஒழித்துவிட்டு டச்சு ஆதிக்கத்தால் இந்தோனேஷிய ஐக்கிய சர்க்காரை நிறுவ முயற்சிக்கிறார்கள் என்று தெரிவித்தார்.

அமெரிக்கா உதவி

ஹேக, அக் 2

டச்சுப் பத்திரிகை தெரிவிப்பதாவது:-

டச்சு சர்க்காருக்கும் அமெரிக்க சர்க்காருக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின்மீது அமெரிக்கா இந்தோனேஷியாவை ஆகாயத்திலிருந்து ஆள்ந்து குறிப்பிட ஏற்றுக்கொண்டிருக்கிறது இது சம்பந்தமாக இந்தோனேஷியாவிலிருந்து இங்கு திரும்பி வந்துள்ள டச்சு கமிஷன் ஜெனரல் ஷெர்மர்ஹார்ன் லண்டன் மார்க்கமாக அமெரிக்கா செல்லுவார்.

டாகடர் ஷாரியார் திரும்புகிறார்

லண்டன், அக் 2

டாக்டர் சுல்தான் ஷாரியார் கூடிய சீக்கிரம் இங்கிருந்து ஜாக்ஜகர்த்தாவுக்குப் புறப்படடுச் செல்வார். (ராய்ட்டர்)

நிரந்தரக் காரியதரிசிகள் நியமனம்

மந்திரிசபைக் காரியதரிசி திரு. டி. டி. பெரேரா

கொழும்பு, அக் 3

கவர்னர் கீழ்க்கண்ட 12 பேர்களை நிரந்தரக் காரியதரிசிகளாக நியமித்திருக்கிறார்:-

1 திரு. வி. குமாரசாமி உள்நாட்டு ஆலாகா.
2 „ சி. இ. ஜோன்ஸ் நிதி, இலாகா
3 „ இ. டபிள்யூ. கன்னங்கரா சுகாதாரம் ஸதலஸதாபனம்
4 திரு ஆர் எஸ். எம். பவுலியர்-உணவு கூட்டுறவு.
5 „ கே சோமசுந்தரம் வர்த்தகம்
6 „ ஏ. ஜி. ரணசிங்க விவசாயம்
7 „ ஜே. என். ஆறுமுகம் போக்குவரத்து, மராமத்து
8 திரு. சி. ஜே. டி. லங்கறி தொழில், சமூகசேவை
9 „ ஆர். எச். பாசெ— கைத்தொழில்
10 „ கே வைத்தியநாதன் பாதுகாப்பு, வெளிநாட்டு விஷயம்
11 திரு. எல். ஜே செனவிரத்ன—கல்வி
12 „ ஆர் என். பாண்ட் தபால்-தந்தி

திரு. டி. டி. பெரேரா மந்திரிசபைக் காரியதரிசியாகவும் பொக்கிஷ உதவி காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
104 ஏ, தட்டாத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து ஸு புரட்டாசி மீ 18உ
சனிக்கிழமை

சிறிய படகும் பெரிய பாரமும்

புதிய மந்திரி சபை அமைக்கப்பட்டிருக்கிறது. டொனமூர் திட்டத்தின் கீழ் 7 மந்திரிகளும், 3உத்தியோகதர்களும் செய்து வந்த வேலையை 14 மந்திரிகள், 14 உதவி மந்திரிகள், 14 நிரந்தரக் காரியதரிசிகள் (சிவில் சர்வீஸ் வர்க்கத்தவர்) 14 உதவிக் காரியதரிசிகள் (இவர்களும் சிவில் சர்விஸ் வர்க்கத்தவர்) ஆக 56 பேர்சேர்ந்து செக்கிழுக்கப் போகிறார்கள்! இலங்கையோ சிறிய தீவு. இதன் வருமானமும் ஓர் அளவுடையது. சண்டைக்கு முன் சுமார் 10 கோடி ரூபாயாக விருந்தது. சண்டைக் காலத்தில் 40 கோடி ரூபாவாகியிருக்கலாம். காரணம் யுத்த சம்பந்தமாய் பிரிட்டிஷ் சைனியங்கள் இந்நாட்டில் தங்கியிருந்தன. அதற்கான செலவுகள் இந்நாட்டில் செய்யப்பட்டபடியால் இந்நாட்டவருக்கு வருமானம் அதிகம் ஏற்பட்டது. அந்நிலைமை இனியும் ஏற்படுமா என்பதை யோசிக்க வேண்டும்.

வரவுக்குத்தக்க செலவு செய்வதுதான் புத்திசாலிகளுக்கு அழகு வரவு எந்தெந்த துறைகளில் வரும்என்பதை யோசிக்க வேண்டும். இலங்கைக்கு வருமானம் கொடுக்கும் முக்கியமான தொழில் தேயிலையும் ரப்பரும். ரப்பரின் நிலைமைதான் யாவரும் அறிந்தது. அரசாங்கத்தார் அதிக விலை கொடுத்து வாங்கா விட்டால் அநேகம் தோட்டங்கள் மூடப்படலாம். இதற்கு உதவி செய்ய தேயிலையின் பேரில் வரி போடப்பட்டு வருகிறது. ஆனால் தேயிலையின் நிலைமை எவ்வளவு காலம் இப்படியே நீடிக்கும்? ஜாவாவில் சமாதானம் ஏற்படுமாயின் ஜாவாத்தேயிலை எல்லாத் தேயிலையையும் அடிக்கும் என்பதை மறக்க வேண்டாம்.

இலங்கையிலுள்ள அநேகம் ஐரோப்பியத் தோட்டக்காரர்கள் தங்கள் தோட்டங்களை விற்று விட்டு தென் ஆபிரிக்காவில் தேயிலைத் தோட்டங்கள்உற்பத்தியாக்கிவருகிறார்கள் தேயிலைக் குகந்தவிடம் அங்கு ஏராளமாயுண்டு நீக்ரோவர்களுக்குச் செய்துள்ள பலதடைகள் காரணமாய் அந்நாட்டில் குறைந்த சம்பளம் இன்னும் பல காலம் நீடித்தவர ஏதுவுண்டு. அந்நிலை இந்நாட்டில் முடியாது.

அதுமாத்திரமன்று இந்நாட்டில் தேயிலை சுமார் 50 வருஷ காலமாக இருந்து வருகிறது. எந்தப் பயிருக்கும் ஓர் வயதளவுண்டு. மனிதன் ஓர் வயது வரையில் முழுவேலை செய்துவர, அதன் பிறகு அவன் வேலை அளவு குறைந்து வருவதைக் கவனிக்கிறோம். அதுபோல் தேயிலையின் நிலையும் என்பதை உணரல் வேண்டும். வயது போன காரணத்தால் தேயிலை உற்பத்தியும் குறைந்து வருகிறது. அது மாத்திரமன்று. 'பிளிண்டர் பிளேட்' என்ற வியாதியும் தோட்டங்களில்தோன்றியிருக்கிறது. இந்த வியாதியைப் போக்குவதென்றால் டி. டி. ரி. என்ற மருந்தை இலங்கைத் தோட்டங்களில் எல்லாவிடங்களிலும் ஏககாலத்தில் ஓரே பிளேன் கொண்டு தெளிக்க வேண்டுமாம். அதற்குத்தக்க பிளேன்கள் கிடையாது. இந்த வியாதிகாரணமாகவும் தேயிலை விளைவு குறைவு இந்நிலையில் தேயிலை வருமானம் குறையும்.

பிறகு தேங்காய் ஏற்றுமதி வருமானம். பிரிட்டிஷ் ஒப்பந்தத்தில் எவ்வளவு காலம் காலந்தள்ளலாம்? மேலே கூறிய தொழில்களில் வரும் வரி வருமானம் நீங்கலாக, மேற்சொல்லியதொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களது வருமான வரி வருமானமும் குறையும் என்பதை மறக்க வேண்டாம். பிறநாட்டுக் கம்பெனிகள் கொடுக்கும் வருமானவரிதான்பெரும்பாகம், நமது ஏற்றுமதிப் பொருட்களை பிற நாட்டில் வாங்கினால் தான் நமது இறக்குமதிப் பொருட்களுக்குப் பணம் கொடுக்க முடியும். நமது இறக்குமதி என்ன? அரிசி, உடுபுடவைகள், இயந்திரங்கள் முதலியன? நமது ஆகாரப் பொருட்களுக்கு அதிக விலை கொடுக்க வேண்டியருக்கிறது. இவை இலாமல் நாம் காலந்தள்ள முடியாது. நமது ரப்பர் இல்லாமல் சேர்க்கை ரப்பர் எடுக்கலாம். தேயிலையை விட்டு கோப்பி குடிக்கலாம் பிறர் அவ்விதப் பழக்கம் இப்பொழுது இங்கிலாந்தில் ஏற்பட்டு வருகிறதாம்!

இருக்கும் நிலைமையைக் கவனிக்கையில் இலங்கையின் வருங்காலம் கவலைக்கிடமாகவிருக்கிறது. இந்நிலையில் மந்திரிமாகாண் அனுவசியச் செலவுகளை அதிகரித்துக்கொண்டேபோனால் என்னவாகும். அதிகமான வருமானம் வரலாம் என்ற எண்ணம் இருக்கலாம். அப்படி வரும் என்ற நிச்சயம் ஏற்பட்ட பிறகு செலவுகளைப் பெருக்கிக்கொண்டால் நியாயமாகவிருக்கும்.

அதை விட்டு மாமன், மருமகன், மைத்துனன் என்று உற்றார் உறவினர்களுக்கு உத்தியோகம் கொடுக்கவும் கட்சியாட்களுக்கு உத்தியோகம் கொடுக்கவும் தங்களுடைய அதிகாரம் எப்பொழுதும் தழைத்தோங்க ஆள் திரட்டவும் அரசாங்கப் பணத்தை எடுத்துச் செலவு செய்ய மந்திரிகள் எண்ணினால் சிறிய படகில் பெரும் பாரத்தைப் போட்டு பெருங்கடலில் பிரயாணம் செய்ய எண்ணுவதுபோலாகும் இது விஷயத்தில் பொதுமக்கள் எச்சரிக்கையாகவிருக்க வேண்டும். திருவாளியெத்தன் ஓடம் கவிழ்ந்த கதையாக முடியக் கூடாது நமது சேனநாயக்காவின் திருவிளையாடல்கள் என்பது எமது அவா!

பார்லிமெண்ட் தேர்தல் எதிரொலி

மட்டக்களப்பு, அக். 1

மட்டக்களப்பு நீதிபதி ஸ்ரீ ஸகந்தராஜா டபிள்யூ ஏ. மார்ட்டின் என்பவரைத் தாக்கிய குற்றத்திற்காக கலந்தர் செய்யது முகம்மது என்ற ஏறாவூர் வாசிக்கு மூன்று மாதச் சிறைத்தண்டனை விதித்துள்ளார் எதிரி மார்ட்டினை வழிமறித்து "நீ ஏன் அந்த அபேட்சகருக்கு வோட்டளித்தாய்?" என ஒரு பார்லிமெண்ட் அபேட்சகரின் பெயரைக்கூறி கேட்டதாகவும் அதன்பின் அவரைத் தாக்கியதாகவும் சொல்லப்பட்டது.

எதிரி தான் குற்றவாளி என்பதை ஒப்புக்கொண்டான் நீதிபதி தமது தீர்ப்பின்போது "வாக்காளர்கள் தமக்கு விருப்பமானவருக்கு எவ்விதப் பயமும் இன்றி வோட்டளிக்க அனுமதிக்கப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டார். (ந-நி)

நீதிபதிகளின் மாற்றம்

திரிகோணமலை, அக். 1

திரிகோணமலை டிஸ்திரிக் கோர்ட் நீதிபதி திரு. ஜுலியஸ் எப். பிலிப்ஸ் அவர்கள் இம்மாதம் 10-ம் தேதியளவில் குருணாகல் டிஸ்திரிக் கோர்ட்டுக்கு மாறிப் போவதாகவும், திரிகோணமலை டிஸ்திரிக் கோர்ட்டுக்கு நீதிபதி திரு. 'ரோலன்டி சொய்சா அவர்கள் கொழும்பிலிருந்து வந்து பதவி ஏற்பதாகவும் அறியப்படுகிறது.

திரிகோணமலை டிஸ்திரிக் கோர்ட் சக்கிடுத்தார் திரு ஜே பவிராஜசிங்கம் கிளரிக்கல் செர்விஸ் முதலாம் வகுப்பிற்கு உயர்த்தப்பட்டார். [ந-நி]

ரப்பர்மீது கலால் வரி

இந்திய அரசாங்க உத்தரவு

புதுடில்லி, அக். 1

இந்திய ரப்பர் போர்டார் 100ருத்தலுக்கு எட்டரைவீதம் கலால வரி அடுத்த 3 மாதத்திற்கு இந்தியாவில் தயாராகும் ரப்பர்மீது விதிக்கவேண்டுமென்று இந்திய அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இது இன்றுதொடக்கம் அமுல் நடத்தப்படுமென்று தெரிகிறது. (ராய்ட்டர்)

சுதந்திர இந்தியாவின் பிரும்மா

உலகம் பின்பற்ற வேண்டிய மகானுபாவர்

காந்திஜிக்கு பிரிட்டிஷ் பொருளாதார, சுகாதார மந்திரிகள் புகழ்மாலை

ஐக்கிய தேச ஸ்தாபனத்தின் அகில உலக 500 பிரதிநிதிகளுக்கு ஸ்ரீமதி விஜயலட்சுமியின் விருந்து

சயாமிலும் இந்தோ-சைனாவிலும் மாபெரும் பொதுக் கூட்டங்கள்

புதுடில்லி, அக் 2

கோடிக்கணக்கான மக்கள் இன்று மகாத்மா காந்தியின் 79-வது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்கள் மகாத்மா தனது ஆத்ம சக்தியால் உலகம் அதிசயிக்கத்தக்கபடி நாட்டில் அமைதியை நிலைநிறுத்துவார் என்றும் இக்காரியத்தை வேறெவராலும் செய்து முடிக்க முடியாதென்றும் நம்புகிறார்கள்

உலகெலாம் தனது பிறந்த தினத்தை மக்கள் கொண்டாடும்போது மகாத்மா மட்டும் இன்று உண்ணாவிரதமிருந்து தனது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். நாடெங்கும் தந்தையான மகாத்மாவின் உருவப் படங்களையும் அவரது வாழ்க்கைச் சரித்திரத்தையும், அவரது அரிய சேவைகளையும் அவர்மீது உலகம் வைத்திருக்கும் நம்பிக்கையையும் பற்றி பத்திரிகைகள் எல்லாம் செய்திகள் பிரசுரம் செய்தன.

நாட்டுப் புறங்களிலும் நகரப் பகுதிகளிலும் எங்கும் இறை காந்திஜி பிறந்த தினக் கொண்டாட்டம் நடைபெற்றது. நாட்டிற்கு விடுதலையைக் கொண்டு வந்த மகாத்மா எதிர்காலத்தில் இந்தியாவை மகிமை மிக்க நாடாக்குவார் என்ற நம்பிக்கையுடன் கோடிக்கணக்கான மக்கள் அவரது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்கள்.

நியூயார்க்கில்

நியூயார்க், அக். 2

மகாத்மா காந்தி பிறந்த தினத்தை முன்னிட்டு இன்று ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் ஐக்கிய தேச ஸ்தாபனத்தின் 57 நாடுகளின் பிரதிநிதிகளும் ஆலோசகர்களுமான 500 க்கு மேற்பட்டவர்களுக்கு அழகிய வால்டார்ப்அஸ்டோரியாஎன்ற பிரமாண்டமான ஹோட்டலில் ஓர் விமரிசையான விருந்தளித்தார்.

லண்டனில்

லண்டன், அக். 2

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு இந்திய சர்க்கார் சார்பாக இங்குள்ள ஹைகமிஷனர் கிருஷ்ண மேனன் இந்தியா மாளிகையில் ஓர் விருந்தளித்தார் அவ்விருந்துக்குப் பிரிட்டிஷ் சர்க்கார் மந்திரிகள், பிரிட்டிஷ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், லண்டனிலுள்ள மற்ற தேசங்களின் பிரதிநிதிகள் முதலிய ஏராளமான பிரமுகர்கள் வந்திருந்தார்கள்.

பிரிட்டனின் பொருளாதார மந்திரி ஸர். ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:- இந்த நெருக்கடியான சமயத்தில் மகாத்மா காந்தி கைகொண்டுவரும் மனோ உறுதியையும், தீரத்தையும், சக்தியையும் மற்றவர்களும் கடைப் பிடிப்பார்களேயானால் உலக நிலைமையே அடியோடு மாறி உலகம் ஆனந்த மயமாக விளங்கும். கல்கத்தாவில் பொங்கி யெழுந்த துவேஷத்தையும் பகைமையையும் சாந்தப்படுத்தி அமைதியை நிலைநாட்டகாந்திஜியைகைக் கொண்ட மார்க்கம் உலகமே பின்பற்ற வேண்டிய வழியாகும். இப்பொழுது இந்தியாவில் நிகழும் சம்பவங்களை இறுதியில் நன்மையால் வெல்லக் கூடிய தீமையென்று மகாத்மா கருதுவது முற்றிலும் நியாயமே. ஆனால் அத்தீமைகளை நன்மை வெல்லும் என்ற நம்பிக்கையுடன் அவர் கையாளும் முறை எவராலும் சாதிக்க முடியாத அவ்வளவு அற்புதமான முறையாகும்.

அடுத்தாற்போல் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய உறவு மந்திரி திரு ஆர்தர் ஹென்டர்சன் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:- மகாத்மா காந்தி புதிய தேசீய இந்தியாவின் சிருஷ்டிகர்த்தா; நவ இந்தியாவின் பிரும்மா. தாங்கள் இந்தியர்கள் என்ற பொறுமை கொள்ளும்படியான கண்ணிய உணர்ச்சியை இந்தியாவின் ஆண் மக்களுக்கும் பெண்மக்களுக்கும் ஊட்டிய உத்தம மகான். இந்தியசர்க்கார் இப்பொழுது சிரமமான நிர்வாகத்தை செலுத்தி வருகிறார்கள். பண்டித நேரு தலைமையிலும் அவரது சகாக்களின் ஆதரவிலும் இன்று அவர்களை துர்நோக்கி பிரச்னைகள் சமாளிக்கப்பட்டு, இந்தியா முன்னேற்றத்தையும் சுபீட்சத்தையும் பேரும் புகழையும் அடையும் புதிய சகாப்தத்தை அடையும் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். பிரிட்டனிலுள்ள இந்தியர்கள் இந்தியா மாளிகைக்கு பரிசாக அளித்த காந்திஜி உருவப்படத்தைப் பெற்றுக்கொண்ட இந்தியா ஹைகமிஷனர் கிருஷ்ண மேனன் பேசியபோது, பிரிட்டனிலுள்ள இந்தியர்கள் அனைவரும் இந்திய சர்க்காரிடம் விசுவாசமாக இருக்கிறார்கள் என்பதற்கு அது அறிகுறியாகுமென்று தெரிவித்தார்.

இந்திய ஹைகமிஷனர் காரியாலயத்தைச் சேர்ந்த எல்லாக் காரியாலயங்களுக்கும் விடுமுறையாகும்.

பொதுக் கூட்டம்

இன்று லண்டனில் காந்திஜி பிறந்த தினத்தை முன்னிட்டு பிரம்மாண்டமானதோர் பொதுக் கூட்டம் நடைபெற்றது அக்கூட்டத்தில் பிரிட்டிஷ் தொழிற்கட்சி சார்பாக பிரிட்டிஷ் சர்க்காரின் சுகாதார மந்திரி திரு. பெவான் பேசிய போது பின்வருமாறு தெரிவித்தார். இந்திய சர்க்கார் தற்பொழுது அனுபவித்து வரும் சோதனையிலிருந்து வெற்றிகரமாக வெளியேறிவருமென்று கருதுகிறேன். இந்தியாவின் சுதந்திரம் உலக சரித்திரத்தில் மகத்தானதோர் சம்பவம் அந்தச் சரித்திரத்திலே மகாத்மா காந்தியின் பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும்.

சாந்த சீலரும் தீரபுருஷரும் அன்பின் உருவம்மானவர் காந்திஜி என்று தெரிவித்து திரு. ஆர்தர் ஹென்டர்சன் ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

காந்திஜி இந்தியாவில் பிறந்தவராகினும் அவர் உலகத்துக்கே உரித்தானவர் என்றும், மகாத்மாவின் அபூர்வ சக்திகளை பாதி உலகம் தெரிந்திருந்த போதிலும் இன்னும் முழு உலகமும் உணரவில்லையென்றும் பிரிட்டிஷ் பார்லிமெண்டின் இந்தியா லீக் கோஷடித் தலைவர் ரெஜினால்ட் சோரன்டன் கூறினார்.

சயாமில்

பாங்காக், அக். 2

சயாமில் காந்திஜி பிறந்த தினம் அதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இங்கு பாரத் கலாச்சார சங்கத்தாரின் ஆதரவில் பிரமாண்டமானதோர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் ஏராளமான ஹிந்துக்கள், சீக்கியர்கள், முஸ்லிம்கள், சயாமியர்கள், சீனர்கள், வியட்நாமியர்கள் முதலிய சகல வகுப்பினரும் கலந்து கொண்டார்கள் சயாமிலுள்ள இந்திய ஸ்தானாதிபதி பகவத்தயாள் பேசியபோது, இந்தியாவின் விமோசனம் மகாத்மா காந்தியின் போதனைகளைப் பின்பற்றுவதிலிருக்கிறதென்று தெரிவித்தார்.

இந்தோ-சைனாவில்

சைகோன், அக் 2

இந்தோ-சைனாவில் மகாத்மா காந்தியின் பிறந்த தினம் அதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இங்கு ஓர் ஆலயத்தில் நடைபெற்ற பெரியதோர் பொதுக் கூட்டத்தில் ஹிந்து முஸ்லிம் சீக்கியர்கள் ஏராளமாகக் கலந்துகொண்டனர். இங்குள்ள ஒவ்வொரு வீடுகளிலும் கடைகளிலும் இந்தியாவின் தேசீயக் கொடிகளும் பாக்கிஸ்தான் கொடிகளும் சேர்ந்து பறந்துகொண்டிருந்தன.

இந்தியாவின் ஸ்தானிகர் அசோக மேத்தா பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

அன்பு, சகிப்புத்தன்மை, நன்நம்பிக்கை இவைகள் தருமபும் மகாத்மாவின் உபதேசங்களால் வகுப்புச் சச்சரவால் துயருறும் இந்தியாவும் பாக்கிஸ்தானும் கூடிய சீக்கிரம் விமோசனம் அடையும். அங்கு நடைபெறும் வகுப்புச் சச்சரவுகளைக் கண்டு இந்தியா சுதந்திரத்திற்கு அருகதையல்லவென்று சிலர் கருதுவது முற்றிலும் தவறு பெரும் பெரும் புரட்சிகளுக்குப் பின் பிரான்ஸும் ரஷ்யாவும் எவ்விதம் தலை தூக்கினவோ அதுபோன்று இந்தியாவும் பாக்கிஸ்தானும் உயர் நிலையடைந்து உலக சமாதானத்திற்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபடும்.

இந்தியக் கப்பல் போக்கு வரவு

பிரிட்டிஷ் ஐரோப்பிய கம்பெனிகளுடன்ஒப்பந்தம்

லண்டன், அக் 1

இந்திய ஸ்டீம்ஷிப் கம்பெனி லிமிடெட்டார் பிரிட்டிஷ், ஐரோப்பிய கப்பல் போக்குவரத்து மகாநாட்டுடன் ஓர் ஒப்பந்தம் செய்துவிடடார்கள் இதன் பிரகாரம் மேற்படி கம்பெனிக் கப்பல்கள் இந்தியா, பிரிட்டன், ஐரோப்பா முதலான தேசங்களிடையே வியாபாரப் போக்குவரவில் பங்கு பற்றிக் கொள்ளலாம் என்று அறியப்படுகிறது. [ராய்ட்டர்]

இளவரசியின் கல்யாண பரிசு

பீக்கிங் நகரகம்பளங்களில் அவருக்கு மோகமாம்

ஷாங்கை, அக். 1

சீனாவில் இருக்கும் பிரிட்டிஷாரும் அவர்களது நண்பர்களுமாகச் சேர்ந்து இளவரசி எலிசபெத்திற்கு கல்யாணப்பரிசளிப்பதற்காக பணம் சேகரித்து வருகிறார்கள். இதுவரை மொத்தம் 17 கோடி சீனடாலர்கள் சேர்ந்துவிட்டன. இப்பணத்தைக்கொண்டு என்ன பரிசு அளிப்பது என்ற கேள்விக்கு பீக்கிங் நகரக் கம்பளங்களைத்தான் விரும்புவதாக இளவரசி குறிப்பாக உணர்த்தியுள்ளாராம் ஆனால் மேற்படி கம்பளங்கள் கல்யாணத் தினத்திற்கு வந்துசேராது என்றே நம்பப்படுகிறது. காரணம் அவற்றிற்கு விசேஷ 'ஆர்டர்' கொடுத்தே தயாரிக்க வேண்டியிருக்கிறது. (ராய்ட்டர்)

பாக்கிஸ்தானுக்குப் பிரெஞ்சு ஸ்தானிகர்

பாரிஸ், அக். 1

பிரெஞ்சு மந்திரி சபைக் கூட்டத்தில் பாகிஸ்தானுக்கு பிரெஞ்சு ஸ்தானிகர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இதற்கு யாரும் குறிப்பாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. தேர்ந்தெடுக்கப்படும் நபரின் பெயர் பாக்கிஸ்தான் அரசாங்கம் அவரை அங்கீகரித்துக்கொண்ட பின்தான் பகிரங்கமாக்கப்படும். [ராய்ட்டர்]

அராபியர்களின் எதிர்காலம்

லீக் காரியதரிசி, ரிவ் தலைவர், மகாமுப்தி, எகிப்து மன்னர் சந்திப்பு

லெபானனில் கவுன்ஸில் கூட்டம்

அமெரிக்காவும் ரஷியாவும் மோதாதபடி அராபிய நாடுகள் நடுநிலைமை வகிக்கும்

கெய்ரோ, அக். 2

இன்றிரவு அராபிய லீக் காரியதரிசி அசாம்பாஷா பத்திரிகா நிருபர்கள் மகாநாட்டில் பின்வருமாறு தெரிவித்தார்:- அராபிய லீக்கைச் சேர்ந்த மத்திய கிழக்கிலுள்ள 7 அராபிய நாடுகளும் ஒரு கோஷ்டியாக நிறுவப்பட வேண்டுமென்ற கொள்கையை ஐக்கியதேச ஸ்தாபன காரியதரிசி ஒப்புக்கொண்டிருக்கிறார்.

கிரீஸ், துருக்கி, அராபிய லீக்கைச் சேர்ந்த 7 நாடுகள் இவைகளயாவும் ஒரு மத்திபதரைக் கடல் கோஷ்டியாக சேர்ந்து கொள்வதற்கு இடமுண்டு. ஆனால் இவ்விதமான கோரிக்கையைப் பற்றி அராபிய லீக் இன்னும் ஆலோசனை செய்யவில்லை. என்னுடைய கருத்து என்னவென்றால், இந்த 7 அராபிய நாடுகளும் தனித்து நின்று இரு வேறு முரணான லட்சியங்களையுடைய அமெரிக்க கோஷ்டியும் ரஷியக் கோஷ்டியும் மோதிக் கொள்ளாதபடி அராபிய கோஷ்டி நடு நிலைமை வகித்து உலக சமாதானத்தைப் பாதுகாக்க வேண்டுமென்பதே யாகும். ஆனால் புதிய யுத்தம் உண்டாகாதவாறு உலக சமாதானத்திற்கு ஏதுவாக இருக்குமாகில் மத்தியதரைக் கடல் கோஷ்டி அமைவதை நான் வரவேற்கிறேன்.

இன்று காலை ரிவ் தலைவர் அப்துல் கரீமும், ஜெருசலம் மகாமுப்தியும் அராபிய லீக் காரியதரிசியும் சந்தித்து வெகு நேரம் அராபியர் பிரச்னைகளைக் குறித்து ஆலோசனை புரிந்தார்கள்.

அராபிய லீக் காரியதரிசி அசாம் பாஷா சனிக்கிழமையன்று எகிப்து மன்னரைச் சந்தித்துவிட்டு, பாலஸ்தீனத்தைப்பற்றி ஆலோசிக்க லெபானனில் நடைபெறும் அராபிய லீக் கவுன்ஸில் கூட்டத்திற்கு விஜயம் செய்யும் பொருட்டு பயணமாவார். அக்கூட்டத்திற்கு எகிப்து பிரதம மந்திரியும் மற்ற எகிப்திய பிரதிநிதிகளும் திங்கட்கிழமையன்று பயணமாவார்கள்.

பாக்தாத் கவர்னர் உத்தரவு

பாக்தாத், அக். 2

பாலஸ்தீன பிரிவினையை ஆட்சேபித்து இன்று அராபிய நாடுகள் ஒருநாள் பொதுவேலை நிறுத்தம் செய்யவேண்டுமென்று பாலஸ்தீன அராபியர் உயர் கமிட்டி உத்தரவிட்டிருப்பதால், இன்று இங்கு எவரும் ஆயுதங்கள தாங்கிச் செல்லலாகாதென்றும் 5 பேர்களுக்கு மேல் கூட்டம் கூடலாகாதென்றும் பாக்தாத் கவர்னர் கட்டளைபிறப்பித்திருக்கிறார். ஈராக் முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தவும் கடைகளையெல்லாம் அடைத்து பொது வேலை நிறுத்தம் செய்யவும் ஏற்பாடு நடைபெற்றுவருகிறது. (ராய்ட்டர்)

வெங்காய ஏற்றுமதிக்கு சென்னை சர்க்கார் தடை

இலங்கைக்கு ஏராளமாக ஏற்றுமதியாகிறதாம்

சென்னை, அக். 1

இந்த மாகாணத்திலிருந்து வெளியே எங்கும் வெங்காயம் ஏற்றுமதியாகக் கூடாதென்று சர்க்கார் தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

மாகாணத்துக்கு வெளியே முக்கியமாக இலங்கைக்கு வெங்காயம் அதிகமாகப் போவதால், ஏழைகளின் உணவாகிய இந்தச் சரக்கு நியாய விலையில் மாகாணத்தில் கிடைப்பது அரிதாகிவிட்டதென சர்க்காருக்கு பலபுகார்கள் வந்ததன்பேரில் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தடை உத்தரவு டிசம்பர் மாதக் கடைசிவரை அமுலில் இருக்கும்.

மற்றும் 8 ஜில்லாக்களில் மதுவிலக்கு

சென்னை சர்க்கார் 17 கோடி ரூபாய் நியாகம் செய்கிறது

சென்னை, அக் 2

நேற்றிலிருந்து சென்னை மாகாணத்தில் மேலும் 8 ஜில்லாக்களில் (அதாவது மொத்தம் 16 ஜில்லாக்களில்) மதுவிலக்கு அமுலுக்கு வந்துவிட்டது. அடுத்த வருஷம் அக்டோபரில் மற்ற 8 ஜில்லாக்களில், அதாவது நம் மாகாணத்தில் எங்கும் கள்ளுக்கு இடமே இல்லை.

இப்பதினாறு ஜில்லாக்களில் மதுவிலக்கால் சர்க்காருக்கு ரூ 12 கோடி வருமான நஷ்டமேற்படுகிறது மொத்தம் இந்த தலைப்பில் மாகாண சர்க்காருக்கு ரூ. 17 கோடி வருமானம் வந்து கொண்டிருந்தது மதுவிலக்கால் சர்க்கார் வருமான நஷ்டமுடன் மரமேறுவோர் பலர் அதனால் வேலை இழக்கிறார்கள் ஆனால் சில ஆயிரம் பேர் வேலை இழப்பதால் பல லக்ஷம் பேர் மது அரக்கனிடமிருந்து விடுதலை பெறுகிறார்கள்.

பிரதமர் ரெட்டியார் கள்ளிக்கோட்டையிலும், மந்திரிகள் ராஜனும் பக்தவத்சலமும் திருச்சியிலும், டேனியல் தோமஸ் மதுரையிலும் மதுவிலக்கை ஆரம்பித்து வைத்தனர். இவை தவிர தஞ்சை, நீலகிரி, தென் கன்னடம், நெல்லூர், குண்டூர் ஜில்லாக்களிலும் மதுவிலக்கு அமுலுக்கு வந்தது.

ஜனாப் முகம்மது இஸ்மயிலின் வேண்டுகோள்

சென்னை, அக். 2

சென்னை மாகாண முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் முகம்மது இஸ்மாயில் விடுத்திருக்கும் அறிக்கையில், சென்னை சர்க்காருடன் எல்லா முஸ்லிம்களும் உணவு தானிய கொள்முதலிலும், இனி ஆரம்பிக்க இருக்கும் மதுவிலக்கு நடவடிக்கைகளிலும், ஒத்துழைக்குமாறு வேண்டிக் கொண்டிருக்கிறார்.

லண்டன், அக். 1

முன்னாள் இந்தியன் சிவில் சர்விஸைச் சேர்ந்த திரு. வி. எச். மாஸ்டர்மன் இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உதவி ஹைகமிஷனராக நியமிக்கப்படுவார். இதனை சாம்ராஜ்ய உறவுக்காரியாலயம் இன்று வெளியிட்டது. (ராய்ட்டர்)

உலகத்தையே கலங்க வைத்த சம்பவம்

பர்மாப் படுகொலை வழக்கு விசாரணை ஆரம்பித்தவிட்டது

ரங்கூன், அக் 8

பர்மாவின்சரித்திரத்திலேயே மிகவும் திகைப்பூட்டும் வழக்கின் விசாரணை இன்று இங்கே ஆரம்பமாகிறது. உலகின் மூன்றாவது பெரிய ஜெயில் என்று கருதப்படும் இன்ஸீன் மத்திய சிறைவீட்டில் நடக்கும் இவ்வழக்கின்போது 120 சாட்சிகள் விசாரிக்கப்படுவார்கள். அவ்விசாரணைகள் ஜூலை 19ல் நடந்த ஆங்ஸான் முதலிய தேசபக்தர்களின் படுகொலைச்சூட்சிகளின் இருண்ட கதையைத் தெளிவாக்கும் என்றெண்ணப்படுகிறது

வழக்கில் முதலாவது எதிரியாக விளங்குபவர் ஊசா என்னும் மாஜி பர்மாப் பிரதமராகும்.

வழக்கு ஜனவரி வரை நீடிக்கலாம் எனவும், பர்மா அரசியல் அதிகார மாற்றத்திற்கு முன் முடிவுகள் தெரிந்துவிடும் என்றும் பொதுமக்கள் நம்புகின்றனர். படுகொலைக்காளான தியாகியும் தீரருமான ஆங்ஸானும் கொலையுண்ட அவரது இதர ஆருசகாக்களும் பர்மா ஜுபிலி மண்டபத்தில தம் கடைசி நித்திரையில் ஆழ்ந்து கிடக்கின்றனர். அவர்கள் சடலங்கள் இதுவரை தகனம் செய்யப்படாது பேணப்பட்டே வருகிறது. அவர்கள் பட்ட பாடுகளுக்கு காரணமான பர்மா சுதந்திர இலட்சியம் கிட்டி சுதந்திரப் பிரகடனம் செய்த பின்பும், கொலை செய்த காதகர்களை பழி வாங்கிய பின்னருமே அவர்கள் சடலங்கள் தகனம் செய்யப்படும் என்று தெரிகிறது. (ராய்ட்டர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேவல் போலிஸை அடித்தார்கள்

எதிரிக்கு இரண்டு மாத கடுழியம்

திரிகோணமலை, அக். 1

நேவல் போலிஸைச் சேர்ந்த திரு. எதிரிசிங்கோ என்பவருக்கு சென்ற ஆகஸ்டு மாதம் முதலாம் தேதி 1. பஸ்தியான், 2, நைநூன், 3. தேகில் அப்பு ஹாமி, 4. அபயரெட்ன, 5. முடியான்ச, 6. ஜமால்தீன ஆகியவர் அடித்தும் வெட்டியதாகவும் போலிஸாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு இன்று மாஜிஸ்டிரேட் திரு. ஜூலியஸ் எப பிலிப்ஸ அவர்கள் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டு முடிவில மாஜிஸ்திரேட் முதலாம் இரண்டாம் எதிரிகளைக் குற்றவாளிகளெனக்கண்டு முதலாம் எதிரிக்கு 2 மாதக் கடுங்காவல் தண்டனையும் இரண்டாம் எதிரிக்கு 35 ரூபாய் அபராதமும்விதித்தும்மற்றும்எதிரிகளை விடுதலை செய்தார். [ந-நி]

வண்டியோடு பஸ் மோதியது

திரிகோணமலை, அக். 1

வாகரையைச் சேர்ந்த காளிக்குட்டி என்பவர் இரட்டை மாட்டு வண்டியில தமது வீட்டைநோக்கிப் போய்க்கொண்டிருக்கையில் இரவு 7 மணியளவில் அவர் பின்னே சாரதி திரு. விசுவலிங்கம் என்பவரால செலுத்தப்பட்டுச் சென்ற கிழக்கு மாகாணக் கம்பெனி பஸ ஒன்று பாலச்சேலை என்ற இடத்தில் மோதியது வண்டிச் சொந்தக்காரனுக்குக் காயமேற்பட்டது. உடனே கிராமத் தலைவர் கந்தோருக்கு எடுத்துச் செல்லப்பட்டார். விளக்கத்தின் பின் அதே பஸ்ஸில் மட்டக்களப்பு ரண வைத்தியரிடம் கொண்டுசெல்லப்பட்டு சிகிச்சைபெற்று வருகிறார். [ந-நி]

கொடுக்கல் வாங்கல் தகராறு

திரிகோணமலை, செப். 30

திரிகோணமலை ஓயில்மங்கர் தெருவைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை என்பவர், 28-ம் தேதி கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட தகராறில் ஆறுமுகம் அருணாசலம் என்பவருக்கு இரும்புக் கம்பியால் மண்டையில் அடித்ததால மண்டை உடைபட்டு, ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார் என அறியப்படுகிறது. (ந-நி)

10,600 டன் மாவு இலங்கை வந்து சேர்ந்தது

கொழும்பு, அக் 3

இலங்கைக்கு ஆஸ்திரேலியாவில் இருந்து 8,500 டன் மாவு வந்து சேர்ந்துள்ளது. இதைத் தவிர அமெரிக்காவில் இருந்து வேறு 2 100 டன் மாவு வந்து சேர்ந்திருப்பதாகவும் அறிகிறோம்.

போலிஸ் கான்ஸ்டபிளின் தகாத நடத்தை

கொலை வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது

அவிசாவளை, அக். 1

கடந்த பெப்ரவரி 22-ம் தேதி போலிஸகான்ஸடபிள் ஏ. எம். ரூபசிங்கா, என்பவரைக்கொலை செய்ததோடு, யஹோனிஸஎன்பவரைக் கொலைசெய்ய முயன்றதாகவும் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில ஆர். ஏ. மெலிஸ என்பவருக்கு இரண்டரை வருஷம் கடுழியச் சிறைத்தண்டனை அவிசாவளை அசைஸ கோர்ட்டில் நீதியரசர் குரே சட்டம்பையாவால் விதிக்கப்பட்டது

மேற்படி வழக்கில் போலிஸ கான்ஸடபிள் ரூபசிங்காயஹோனிஸ என்பவருடன் சென்று எதிரியின் தாயாரையும் தங்கையையும் பலவந்தம் செய்ததாகவும் அப்போது அங்கே வந்த எதிரி அவரைத் தாக்கியதால் அவர் மண்டதாகவும், யஹோனிஸ காயமுற்றதாகவும் கூறப்பட்டது.

நீதி அரசர் தமது தீர்ப்பில் காலஞ்சென்ற கான்ஸடபிளின் நடத்தை மோசமானது. போலிஸ படையில் தானகற்ற கட்டுப்பாட்டையும் பெற்ற பயிற்சியையும் அவன் மறந்தவனாகக் காணப்படுகிறான். எனது தீர்ப்பிலே சட்டத்தையும் கடமையையும் மறந்து விட்ட போலிஸ உத்தியோகஸ்தருக்கு நீதிஸ்தலம் எவ்வித கருணையும் காட்டாது என்பதை உணர்த்தி விட விரும்புகிறேன் என்று குறிப்பிட்டார்

ஸ்ரீ ராம கிருஷ்ணரின் உபதேசங்கள்

சபைக்கூட்டத்தில் ஸ்ரீ திலிப் குமார் ரேய் பிரசங்கம்

கொழும்பு, அக். 3

வெள்ளவத்தை ஸ்ரீ ராம கிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை டாக்டர் ஜி. பி. மளாள சேகரா தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் "ஸ்ரீ ராம கிருஷ்ணரின் உபதேசங்கள்" என்னும் விஷயம் பற்றி ஸ்ரீ திலிப் குமார் ரேய் பேசினார். இன்றைய இந்தியாவிலே தற்காலத்திற்கேற்றபடி ஆத்ம ஞானத்தைப் பரப்பியவர் ஸ்ரீராமகிருஷ்ணர் என்று இவர் பேசுகையில் குறிப்பிட்டார்.

வருமான வரி செலுத்தாத வருக்குச் சிறைத் தண்டனை

திரிகோணமலை, அக். 1

தின்னல் செலுத்தப்பட வேண்டிய ரூ 3813 வருமான வரியைச் செலுத்தத் தவறி எஸ். பிலிப்பையா என்பவர் மீது திரிகோணமலை மாஜிஸ்டிரேட் ஜூலியஸ பிலிப்ஸ 6 மாத வெறுங்காவல் தண்டனை விதித்துள்ளார்.

லொசிஞ்சர், டொபி, ஐசிங் சுகர்
இம்மூன்றிலும் முதல்தரமானது வேண்டுமென்றால்
குயின் (ராணி) மார்க்கே
பார்த்து வாங்குங்கள்



குயின் (ராணி) கன்பெக்ஷன் கம்பெனி
297 & 307 சீ ஸ்டிரீட் (செட்டியார் தெரு)
கொழும்பு
Phone: 4511 Telegrams:- "CONFECTION"

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

ஏகாதிபத்தியபணமூட்டைகளின் கைப் பொம்மை

இன்றைய இலங்கையின் மந்திரிகள் குழாம்

உற்றார் உறவினர்களுக்குப் பதவிகள் பங்கீடு

மொரட்டுவை தொகுதி பார்லிமெண்டு அங்கத்தவரான திரு சோமவீர சந்திரசிரியின் பத்திரிகையான "நிதாஸ" என்னும் சிங்களப் பத்திரிகை 1-10 47ல் பின்வருமாறு எழுதுகிறது.

"பொதுத் தேர்தல் முடிந்தபின் அரசாங்கத்தை நடத்தக்கூடிய அரசியல் கட்சியின் தலைவர் யாரென்று அறிந்து, கவர்னர் அவருக்கு பிரதம மந்திரி பதவியைக் கொடுத்து மந்திரி சபையை அமைக்குமபடி உத்தரவிடுவார். இவ்வளவும் கவர்னர் செய்யவேண்டியதெனவே, அவர் அவற்றைச் செய்து முடித்து விட்டார்

ஆனால், இவ்வளவையும் பாலிமெண்டு நீதியை அனுசரித்து கவானர் செய்யவில்லை கட்சிகளின முக்கியத்துவத்தையும் திறமையையும் தீர்க்கமாக யோசியாது, தனது பழைய கூட்டாளியான சேனநாயககா மூப்பனாரை பிரதம மந்திரிப் பதவிக்கு நியமித்துவிட்டார் கவானர்.

குறையாடி காரியத்தை பார்த்துக் கொள்ளும் சாமராஜ்ய பணக்காரர்களின் அரசாங்கத்தின் பிரதம மந்திரி பதவுக்கு சேனநாயக்கா மூப்பனாரைப் போன்ற சாம்ராஜ்ய பணக்காரரை வேறுவிதமாகச் சொன்னால சாம்ராஜ்யக் கோவில பூசாரியை, பிரதம மந்திரியாக தெரிவுசெய்வதில் யாரும குதூகலப் படமாட்டார்கள. குதூகலப் படுபவர்கள பார்லிமெண்டு சட்டபபிரமாணங்களை தம் சட்டைப் பையில் வைத்திருக்கும சேனநாய்க்கா பருத்தக்காரர்களேயவர்.

சென்ற 17 வருட காலமாக இததேச நிர்வாகத்தை கைப்பற்றி, சில தனவந்தக் குடும்பங்களின சுக க்ஷேமத்திற்காக தேச மக்களை குறைபாடியவர்களன் சிவில உரிமைக்கு மண் போட்ட — சேனநாயக்கா மூப்பனார் அன்றைய தினம (சென்ற மாதம 24-ம் தேதி) தமக்கு முன் கூட்டியே தெரிந்தபடி கண்டியில் கவர்னரிடம பிரதம மந்திரி பதவி நியமனத்தைப் பெற்றபின, அப்படியே பககமபாராது இறங்காமல தலதா கோபுரததுகுச் சென்றார் அங்கே தேசததை பிற்போகுகுத தள்ள தான் பெற்ற உயர் பதவிக்கு நன்றியறிதலாக வணக்கம செலுததினார் பின்பு, கைதட்டி கரகோஷம செய்யும கூலிக்கார கும்பல்கள் புடைசூழ கொழும்புக்கு வந்தார்.

மோட்டாகாரிலவாயுவேகததிலே வந்த சேனநாயக்கா மூப்பனார வக்டோரியா பாலத்தில வரவேற்கப்பட்டு, கூலிகாரர்கள் புடைசூழ ஊர்வலமாக பொரளை, கனததை மயானம வரைகும பவனி வந்தார் ஊர்வலததை நடததிய பருதகங்கள் யார்? கொடி பிடித்து வந்தவாகள் யார்? மாலைகளை சூடியவர்கள் யாவர்? பணம செலவழித்தவர்கள் எவர்கள்?

பழைய சொற்றைக் கலந்து ஏழை மக்களுக்கு வற்று பணமாகிய ஹோட்டல காரர்களே! புழுக்கள் நெழியும் பழைய மாவை நனைத்து பாணுக வற்று ஏழை மக்களுக்கு வயிற்றுக கோளாறை யுண்டாக்கிய பேக்கரிக் காராகளே! ஏழை மக்களின சுட்டுகானச குறைபாடும "பகெட் ஷாப்" வைததிருக்கும "புகை" காரர்களே வீர தீராகளாக சாபரமவீசனார்கள். பற்றபடி பிளாக் மாரகெட் ஆசாமிகளென்ன? ரததநுளம்புகளான பல முதலாளிகளென்ன? இவர்களெலலோரும் பந்தம் பிடிபபதற்கு நான் முந்தி நீ முநதயென்று முனவந்ததல் குடுமிச் சச்சரவுகளும் ஏற்பட்டது.

இவ்வித வரவேற்புபசாரங்களில மனங்குளிர்ந்த பரதம மந்திரியார, அன்றைக்கு ஆகாய வசனி மூலம் பேசுகையில் "இலங்கைக்கு சுதந்திரம் பெறுவது தனது நோக்கமல்லவென்றும், தேச மக்களின் பொருளாதார நிலைமையை அபிவிருததி செய்வதே தனது நோக்கம்' என்றும் கூறினார்.

அரசியல் விடுதலையைப் பெறுமுன பொருளாதார விடுதலையைப் பெற முடியாதென்பது நம் தேசத்து பிரதம மந்திரியாருக்குத் தெரியாவிட்டாலும், பள்ளிக்கூட மாணவர்களும் இதன் உண்மையை நன்றாகத் தெரிந்திருக்கிறார்கள். எனினும இது விஷயம அவருக்குந் தெரியாமலல இதெலலாம் அவரது திரித்துககூறும் சாமர்தியமே, எனினும, இந்தப் பேச்சை பொது மேடையில் பேசாமல், ஒரு அறைகுள்ளிருந்து பேசியது நல்லதாய்ப்போய்விட்டது.

அடுத்தபடி, தனது மந்திரி சபைக்கு வேண்டியவர்களைத் தெரிவுசெய்தார். முன் பககம கூட்டம இலலை எனினும், பின் வாசல் பககம பெரிய அமளியாய இருந்தது. அந்த பின் வாசல முற்றுகையில பலருக்கு மனம் சலிதது, சேனநாயககா மூப்பனார் மீது வெறுப்பு ஏற்பட்டதாம். அகில இலங்கைக்கு மட்டுமல; தன் மனச்சாட்சிகும், மாறுக அவர் நடந்து கொண்டாராம் என்பது இப்பொழுது இரகசியமல்ல.

"அலிபாபாவும் நாற்பது கள்ளர்களும்" என்னும் கதையை எழுதிய அந்தக் காலத்து ஆசிரியா இன்று இங்கே இருந்தால், "அலிபாபாவும் பதினமூன்று களளர்களும் என்ற ஒரு கதையை எழுத முயற்சபபார் என்பது நிசசயம. சேனநாயக்கா மூப்பனாரையும் அவரின் பதின்மூன்று மந்திரிகளையும் பற்றி ஐந்தே நிமிஷம் யோசித்து விடடால சிறந்த ஹாஸ்ய ருசிகரமான கதையை எழுதி விடலாம்.

கவர்னரால் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்ட சேனநாயக்கா, (அ.....பா) தெரிவு செய்த 13 மந்திரிகளைபபற்றி ஆராய்ச்சியுடன கவனிக்க வேண்டும். அவர்கள யார்? அவர்களின் பெயாகளை வாசகர்கள் பததிரிகைகள மூலமாக எததனை முறை வாசித்திருப்பீர்கள்.

எப்படியிருக்கிறது சேனநாயக்கா மநதிரி சபை? அதன் அந்தஸதென்ன? நிர்வாகத் திறமையென்ன? ஒன்றுமேயிலலை. அதெலலாம் உறவினர் மநதிரி சபையேயாகும 13 மந்திரிகளில் 8 பேர்கள் அவரவாகளுககிடையே உறவினாகளாவார்கள்; அதுவும நெருங்கிய உறவினர்கள மகன், மருமகன், மச்சான், ஆகியோர் இந்தக் கம்பெனியில இருககிறாகள.

உறவினாகளுக கிடையேயும் அதயந்த தோழர்களுக் கிடையேயும் பதவிகளைப் பகிர்ந்து கொண்ட. இந்த மந்திரி சபையின் அழகைக் கண்டு பொது மக்கள் மன வெறுப்புக் கொள்ளுகிறார்கள உதாரணமாக திரு டி. எஸ சேனநாயககாவின் மகன் டட்லி சேனநாயக்காவுக்கு விவசாயமநதிரிப பதவி 16 வருடமாக கோடிக்கணக்கான பணததை விரையம் செய்த விவசாய மநதிரிப பதவியை மகனுககுக கொடுத்திருப்பதானது, தேச சொத்தும பரம்பரை உரிமை போல் அனுபவிககிறார்களென்றே இதிலிருந்து தெரிகிறது. தந்தையின் ஊழலை மறைபபதற்கு மகனுக்குததானே முடியும்? என்று தகடபன சேனநாயக்கா எண்ணியிருடபதில் ஆச்சரியமிலலை.

அடுததபடி ஸர் ஒலிவர் நியமனம முகியமானது. இவருக்கு உள் நாட்டு மந்திரிப பதவி. இவர் அடககு முறைச் சடடங்களை பிரயோகம் செய்வதில் திறமையானவர் என்பதில சந்தேகமிலலை. எனவே சேனநாயக்காமூடபனாருக்கு ஸர் ஒலிவர் இல்லாமல எதுவும் செய்ய முடியாது. தமது தேவைக்கும் பெயல, சொந்ததிறமும் அவர் வேணடியிருக்கிறார். அலுவிகாரையின்பேரிலஸ அணையை ஸர் ஒலிவாதான் நடததச செல்லப் போகிறார்.

சட்டவிரோதமாகச் சாராயம கடத்தினார்

ரூபாய் 50 அபராதம் விதிக்கப்பட்டது

பட்டக்களப்பு, அக் 1

பொலன்னறுவையைச் சேர்ந்த அலோஸியஸ் பொன்சேகா என்பவர் 6 போத்தல் சாராயத்தை உத்தரவின்றிக் கொண்டுசென்றதாகத் தொடரப்பட்ட வழக்கில் எதிரி தாம் குற்றவாளி என்பதை ஒப்புக்கொண்டார். அவருக்கு ரூபாய் 50 அபராதம் விதிக்கப்பட்டது. [ந-நி]

அரசினர் பயிற்சிப் பாடசாலைப் பிரவேசப் பரீட்சை

ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, அக். 2

அரசினர் பயிற்சிப் பாடசாலைப் பிரவேசப் பரீட்சை அக்டோபர் 11ல் நடைபெறுதென அறிகிறோம். இதற்குக் காரணம் அதே தினததில் கிளெரிக்கல் பரீட்சையும் நடைபெறுவதே. எனவே பிரவேசப்பரீட்சை அக்டோபர் 13, 14-ம் தததிகளில் நடைபெறும் எனத் தெரிகிறது.

கள்ளக் கணக்குகளை எழுதினார்

6 வாரச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது

கண்டி, அக் 2

கண்டியிலுள்ள மெஸர்ஸ் கார்கில்ஸ் லிமிடெட்டில் வேலை செய்யும எச். வி. குரியன் என்பவர் இரு வாடிக்கைக்காரர்களுடைய கடன் கணக்கில் கள்ளத்தனமாக சில கணக்குகளை எழுதிவைததிருந்ததாக குற்றம் சாடடப்படடுக் கொண்டுவரப்பட்ட வழக்கில் கண்டி மாஜிஸ்டிரேட் திரு. டி. எல். ஸி. ரூபர்டஸ எதிரிக்கு ஆறு வாரம சிறைத் தண்டனை விதித்தார். எதிரி அபபீல செய்வதால் நீதி எதிரியை ரூ 500 பிணையில் போகுமாறு விடுததார்.

இலங்கைக்கு தேசிய வாழ்த்துப் பா

தெரிவு செய்யப்படுவதற்கு ரூ. 1000 பரிசு

கொழும்பு, அக் 3

இலங்கையின தேசிய வாழ்த்துப் பா ஒன்றை தெரிவுசெய்வதற்கு இலங்கை முழுவதும் ஒரு போட்டி வைக்க நடவடிகைகள் எடுக்கபபடடுளளன. இலங்கையிலுளள எலலா சமூகங்களுகும் ஏற்றுக்கொள்ளககூடியதாக இருககவேணடுமென்றும் இதில பங்குபற்ற விருப்பமுள்ளோர் இம மாத முடிவுக்குள் கல்வி இலாகா உதவிபடைரக்டர் திரு எஸ எல் பி. கப்புகொட்டுவா வுடன் தொடர்புஏற்படுததிகொள்ள வேண்டுமென்றும இதற்கு ரூ. ஆயிரம பரிசளிக்க திரு வ. ம. ப பெர்னாண்டோ முன் வந்துள்ளதாகவும தெரிவிக்கப்படுகிறது.

வெடிகுண்டை எறிந்த வருக்கு ஒரு மாதச் சிறைத் தண்டனை

கொழும்பு, அக் 3

கும்பனித்தெருவில் மெஸர்ஸ கோர்டன பிரேஸர் அடைகாபெனி றைக்குள் வெடிகுண்டை எறிந்ததாக பி எடவனடி. சிவா என்பவர்மீது குற்றம் சாடடித் தொடரபபடட வழக்கில் எதிரி குற்றததை ஒபபுகொண்டதமேல் கொழும்பு மாஜிஸ்டரேட் எதிரிக்கு ஒரு மாதச் சிறைத்தண்டனை விதித்தார்.

திரு. அந்தோனிப் பிள்ளை அப்பீல் வழக்கு

அக்டோபர் 10-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது

சென்னை, அக். 3

சென்னை தொழிலசங்ககதலைவர் திரு எஸ். ஸி. ஸி. அந்தோனிப்பிள்ளை அபபீல் வழக்கு அக்டோபர் 10-ம் தேதிக்கு ஒததிவைக்கப்பட்டது.

சென்னை சர்க்கார் தடை உததரவை மீறி மாகாணக் கதற்கு வந்ததாகக் குற்றஞ் சாடடப்பட்டு சைதாபேடை சபடிவிஷனல் மாஜிஸ்டரேட்டால் திரு அந்தோனிப் பிள்ளைக்கு ஓர வருஷம் வெறுங காவல் தண்டனை பெற்றதுப் அந்த உததரவின்மேல் அவர் செஷகறபட்டு செஷன்ஸ் கோர்ட்டுக்கு அபபீல் செய்து அந்த அபபீல வசாரணை நேற்று 29-ம் தேதிக்கு ஒததிவைக்கபடடிருந்ததும் ஏறகனவே பிரசுரிக்கப்பட்டடது.

செஷன்ஸ் ஜட்ஜ், நேற்று வழக்கை விசாரணைக்கு எடுததது மீண்டும் அக்டோபர் 10-ம் தேதிக்கு ஒதபிப்போட்டார்.

நரம்புத் தளர்ச்சி

நீங்கள் பலவீனமடைந்து விட்டீர்களா?

உங்கள் வாழ்க்கையில் சந்தோஷமில்லையா?

அப்படியானால் நேரில் என்னைச் சந்தியுங்கள்.

உங்களுக்கு புத்துயிரையும், வீரியத்தையும், தைரியத்தையும் கொடுப்பேன்.

மூலவியாதி மூத்திரக் கோளாறுகள் முதலியவற்றிற்கு உத்தரவாதமுள்ள சிகிச்சை அளிக்கப்படும்.

பஸல் யூனானி டிஸ்பென்ஸரி,
எச். எப். இலாஹி எம். எச்.
353, டாம் ஸ்டிரீட்,
(கோர்ட் போஸ்டாபீஸமுன்பாக)
கொழும்பு.
டெலிபோன்: 2816

கதம்பைக் கயிறு

தேவைக்கு எழுதுங்கள்

இந்தோட்டை கதம்பைக் கயிறு, இன்னும் தம்பால் செய்யப்பட்ட சகலவிதமான சாமான்களுக்கு மேற்கண்ட விலாசத்தில் நேரிலோ, தபால் மூலமோ விலை விபரங்கள் அறிந்து கொள்ளலாம். சில முக்கிய சாமான்கள் ஆர்டருக்கு குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும். மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் விசேஷ சலுகைகள் காண்பிக்கப்படும்.

A. Abdul Kaiyoom,
Coir Ropes
Manufacturer at Gintota
No 44, Wolfendahl Street
Colombo.

ஏ. அப்துல் கையும்,
44, ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.

மொத்த வியாபாரிகளுக்கோர் சந்தர்ப்பம்.

ஷாப்புச் சாமான்களில் உங்களுடைய தேவைகளுக்கு இலங்கையில் இறக்குமதியாளர்களில் முன்னணி வகிக்கும் எங்களை வினவிக்கொள்ளுங்கள். கீழ்க்கண்ட பண்டங்களில் நாங்கள் முக்கியத்துவம் பெற்றவர்கள்:-

லசிஞ்சர்ஸ், சாக்லேட்ஸ், இங்கிலீஷ் பிஸ்கட் தினுசுகள், டின்பால் உணவுகள், டின் ஆகாரவகைகள், இங்லீஷ் மருந்துகள், டொய்லட் சாமான்கள், நூல் வகைகள், சிகரெட்டுகள், இன்னும பலவித சாமான்கள்,

கவனிப்பு:-
அயலூர் வியாபாரிகள் மாதிரிப் பட்டியல் (Pro-forma Invoices) களுக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

O. N. ASSEN MOHAMED & Co.,
Dam Street, COLOMBO.
Grams: "JUST" Phone: 4057

ஈகிள் ஹவுஸ் உயர்தர தாதுசத்துக்களுள்ள பானங்களுக்கு இணையற்றது

தாதுசத்துக்கள் நிறைந்த கீழ்க்கண்ட எமது குளிர் பானங்களைக் கையிருப்பு வைத்திருக்குமபடி உங்கள் வியாபாரிகளைத் தூண்டுங்கள் :—

ஓரஞ்ச் பார்லி
லெமன் பார்லி
வைன்டோ
வைனோ
வினோ
பலதரப்பட்ட குளிர் பானங்கள்
பழ இரசங்கள்
டூ ஸைடர்
சம்பேன் ஸைடர்
ஸ்பெஷல் ஸைடர்

தந்தி:- "ஈகிள் ஹவுஸ்" நிர். 41, பார்பர் வீதி,
போன்:- 2193 கொழும்பு.

ஏஜண்டுகள் இல்லாத பகுதிகளுக்கு ஏஜண்டுகள் தேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலால் நிலையத்தை உடைத்தார்கள்

ஐந்து எதிரிகளும் தண்டிக்கப்பட்டனர்

மாத்தறை, அக். 4

வெலிகமவிலுள்ள கலால் நிலையக் கட்டிடத்திற்குத் தீங்கு விளைத்ததாகவும், அங்குள்ளவர்களைப் பயமுறுத்தியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு (1) எல்ஜின் ஜெயசூரியா, (2) நியூட்டன் சில்வா, (3) எட்மன்ட் ஜெயசூரியா, (4) கலிஸ்ன், (5) சமிலியப்பு ஜெயசூரியா ஆகிய ஐவர் மீதும் கொண்டு வரப்பட்ட வழக்கு நேற்று மாத்தறை மாஜிஸ்திரேட் திரு ஏ. எல். எஸ். ஸ்ரீரான முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டது.

வழக்காளிதரப்பினர் சென்ற பெப்ரவரி மாதம் எட்டாந் தேதி ஒன்பது மணியளவில் எதிரிகள் பலாத்காரமாக கலால் நிலையத்துள் புகுந்து அங்கு ஒரு பெட்டிக்குள் இருந்த சாராயவடிப் பானைகளையும் மற்றும் சாமான்களையும் உடைத்தும், மேசைகளை கவிழ்த்தும், சுவர்களை உடைத்தும், கலால் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணபிள்ளையின் சமரக்கோன் இன்னும் இரண்டு கலால் காவல்காரர்களையும் கொலை செய்யப் போவதாக பயமுறுத்தியதாகவும் கூறினர்.

கட்டிடச் சொந்தக்காரரான திரு பிறெட் ஹெட்டிஹேவா எதிரிதரப்பால் குறுக்கு விசாரணை செய்யப் பட்டபோது, கலால் நிலையம் தமக்குச் சொந்தமான கட்டிடத்திலேயே வைக்கப் பட்டிருப்பதாகவும், தாம் கலால் இன்ஸ்பெக்டர் சமரக்கோனை மதுபானம் அருந்திய நிலையில் பல தடவைகளில் கண்டுள்ளதாகவும், கலால் நிலையத்தில் இருப்பவர்கள் குடிவெறியால் பலமாகப் பாடுவதையும், உரக்கச் சத்தம் போடுவதையும் கேட்டுவந்திருப்பதையும் கூறினர்.

கலால் இன்ஸ்பெக்டர் பீட்டர் பொன்சேகா தமது சாட்சியத்தில், இன்ஸ்பெக்டர் சமரக்கோன் இப்பொழுது உத்தியோகத்தில் இல்லை என்று தெரிவித்தார்.

கலால்சுப்பிரன்டெண்ட் திரு. டபிள்யூ. எம். டி. பெரேரா, இரு கலால் இன்ஸ்பெக்டர்களாகிய பொன்சேகா, சமரக்கோன் ஆகியோருக்கிடையேயுள்ள விரோதமனப்பான்மையைத் தக்மகுத்தெரியும் என்று கூறினர்.

முதலாவது எதிரியாகிய எல்ஜின் ஜெயசூரியா, தமது சாட்சியத்தில் இன்ஸ்பெக்டர் சமரக்கோன் மதுவருந்தினால் பொருட்களை உடைத்தெறிவதைத் தமக்குத் தெரியுமென்றும், தான் அந்தச் சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் தினத்தன்று சமரக்கோனை நிந்தித்துப்பேசியதாலேயே தன்மீது இவ்வழக்கு ஏற்படுத்த வந்தது என்றும் கூறினர்.

வேறு சாட்சியங்களை விசாரணை செய்தபின் முதல் இரண்டு எதிரிகளுக்கும் ஒவ்வொரு குற்றச்சாட்டிற்கும் மும்மூன்று மாதக் கடுழியத் தண்டனை விதித்தார்.

மற்றும் எதிரிகளுக்கு தலா ரூபாய் 50 அபராதம் விதித்தார்.

இத்தாலிய குடியேற்ற நாடுகள்

எகிப்தின் கோரிக்கை

லண்டன், அக். 2

இத்தாலிய குடியேற்ற நாடுகள் சம்பந்தமாக நான்கு வல்லரசுகளின் உதவி அந்நிய நாட்டு மந்திரிகளின் மகாநாடு புதிய சங்கடமான பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டியதாக இருக்கிறது. இது சம்பந்தமாக எகிப்து தனது கோரிக்கைகளை பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ரஷியா ஆகிய நான்கு நாடுகளுக்கும் அனுப்பியிருக்கிறது அவை தவிர இத்தாலிய குடியேற்ற நாடான லிபியாவை சுதந்திரமுள்ள அராபிய நாடாக்க வேண்டுமென்ற அராபிய லீக் சமர்ப்பித்துள்ள கோரிக்கையையும் எகிப்து ஆதரித்திருக்கிறது.

பாலஸ்தீன நோக்கி யூதக் கப்பல்கள் பயணம்

பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் வழிமறித்தன

ஆஸ்திரேலியக் குடியேற்ற மந்திரி மனக்கலக்கம்

ஜெருசலேம், அக். 2

ருமேனியாவிலும், பல்கேரியாவிலுமிருந்து புறப்பட்டு வந்த இரண்டு யூதக் கப்பல்களை 7 பிரிட்டிஷ் கப்பல்கள் வளைந்து கொண்டதாக பாலஸ்தீன யூதர்களுக்கு ரேடியோச் செய்தி கிடைத்தது. ஒரு கப்பல் லஹபா துறைமுகத்துக்கப்பால் பிரிட்டிஷ் யுத்தக்கப்பலால் மறிக்கப்பட்டிருக்கிறது. இன்றிரவு ஹைபா துறைமுகத்திற்கு வந்து சேர வேண்டிய கப்பல்கள் இன்னும்வரவில்லையென்று ஒரு ராணுவ அதிகாரி தெரிவித்தார். மற்றுமிரு கப்பல்களும் கருங்கடல் துறைமுகத்திலிருந்து யூதர்களை ஏற்றிக்கொண்டு பாலஸ்தீனத்தை நோக்கி புறப்படுவதாக லண்டனுக்குச் செய்தி கிடைத்திருக்கிறது.

ஆஸ்திரேலிய குடியேற்ற மந்திரி "டைப் வாட்டர்" என்ற கப்பலில் அநேக யூதர்களை ஏற்றி ஆஸ்திரேலியாவில் கொண்டுபோய் இறக்க ஏற்பாடு செய்திருந்தார் ஆனால் மார்செயில்ஸிலிருந்து சிட்னிக்குப் புறப்பட்ட அக்கப்பல் இன்னும் வந்து சேராததாலால் அது பாலஸ்தீனத்தை நோக்கி கம்பி நீட்டியிருக்குமென்று இன்று ஆஸ்திரேலியப் பார்லிமெண்டில் மந்திரி மனக் கலக்கமுடன் தெரிவித்தார்.

ஹைபாவுக்குச் சென்று கொண்டிருந்த ஒரு லொறி மீது வெடிகுண்டு வீசப்பட்டதால் ஒரு பிரிட்டிஷ் ராணுவ அதிகாரியும் ஒரு பிரிட்டிஷ் சோல்ஜரும் காயமடைந்தனர். 6 வயது யூத வாலிபனைக் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட பிரிட்டிஷ் ராணுவ அதிகாரி பரான் போதிய சாட்சியமில்லையென விடுதலை செய்யப்பட்டார். கோர்ட் இவ்விதம் தீர்ப்பளித்ததும் நகர் நடுவிலுள்ள ஒரு கிரேக்கர் கடையில் வெடிகுண்டு வெடித்தது; கடை நாசமாயிற்று.

ஹோட்டல் வேலையாட்கள்

ஒருவரைத் தாக்கினார்களா?

கொழும்பு, அக். 3

மருதானையிலுள்ள புகாரி ஹோட்டலிலுள்ள முகம்மது நீரா சாகிபு, பி. டி. வில்லியம் பெரேரா ஆகிய இருவரும் சென்ற செப்டம்பர் மாதம் 26-ம் தேதி திரு. பி. ஸி. சந்திரம் என்பவருக்குக் காயம் விளைத்ததாகக் குற்றஞ்சாட்டி ஒரு வழக்கை மருதானைப் போலிசைச் சேர்ந்த ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் வி. எம். ஏ. ஜபத்திலகா கொழும்பு உதவி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தாக்கல் செய்துள்ளார்.

இருவரும் தாம் குற்றவாளிகளல்லர் எனக் கூறியதன் பேரில் விசாரணை இம்மாதம் 28-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பிரான்ஸ்-ஸிரியா, லெபானன்

பொருளாதாரத் தொடர்புகள்

பாரிஸ், அக். 1

பிரான்ஸிற்கும் ஸிரியாலெபானன் நாடுகளுக்கும் இடையேயுள்ள பொருளாதார, நாணய செலாவணித் தொடர்புகளை நிர்ணயிக்க இங்கு ஓர் விசேஷமகாநாடு ஆரம்பித்துள்ளது. இது அநேகநாள் நீடித்து நடக்கலாம் என்று எண்ணப்படுகிறது.

[ராய்ட்டர்]

ஹங்கேரி மனு நிராகரிப்பு

சர்க்கார் எச்சரிக்கை

புடாபெஸ்ட், அக் 2

ஐக்கிய தேச ஸ்தாபனத்தில் சேர ஹங்கேரி சமர்ப்பித்த மனு நிராகரிக்கப்பட்டது ஹங்கேரிய சர்க்காருக்கு மனவருத்தத்தை உண்டுபண்ணியிருக்கிறது. இதனால் ஹங்கேரி மேற்கு ஐரோப்பாவுடனுள்ள உறவை ரத்துச் செய்து மகாஸ்ஸமபடி நேரிடுமென எச்சரிக்கிறது. (ராய்ட்டர்)

ஆசிரியருக்குக் கடிதம்

இலங்கை தேசிய கீதம்

சுதந்திரன் ஆசிரியரவர்கட்கு,

ஐயா,

இக்காலத்தில் அநேக தேசிய கீதங்கள் பற்பலரால் இயற்றப்பட்டு பகிரங்க கூட்டங்களிலும், சங்கீதக் கச்சேரிகளிலும் களியாட்டு விழாக்களிலும் பாடப்பட்டு வருகின்றன. அவற்றுள் சில மிக நீளமாயிருக்கின்றன. பெரும்பாலானவை இத்தீவில் வாழும் ஒரு சாராரையே குறிப்பிடுகின்றன.

கோட்டையிலுள்ள மெஸர்ஸ் வி. டி. பி. பேர்னன்டோ கம்பெனியின் சொந்தக்காரராகிய திரு வி. டி. பி. பேர்னன்டோ அவர்கள் சிறந்த தேசிய கீதத்துக்கு 1000 ரூபா பரிசளிக்க முன்வந்துள்ளார். இது சம்பந்தமாக இலங்கை முழுவதிலும் போட்டி நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்படும். இப்போட்டியில் பங்கு பற்ற விரும்புவோர் தேவையான விவரங்களுக்கு 31-10-47 க்கு முன் எனக்கு எழுதும்படி கேட்கப்படுகின்றனர்.

எஸ். எல். பி. தப்புகொட்டுவ,
வித்தியா கந்தோர்,
கொழும்பு.

சர்ச்சில் கோஷ்டி சண்டப் பிரசண்டம்

கன்சர்வேடிவ்களின் மகாநாடு

பிரைட்டன், அக். 2

இங்கு 3000 பிரதிநிதிகளடங்கிய கன்சர்வேடிவ் கட்சியின் மகாநாடு நடைபெற்றது. நான்கு முக்கிய விஷயங்களைப் பற்றி பேசி முடிவு செய்ய மகாநாடு கூடியது முதலாவது நாட்டின் பொருளாதார நெருக்கடி பற்றி விவாதிக்கப்பட்டது பிரிட்டிஷ் தொழிற்கட்சி சர்க்கார் இது சம்பந்தமாக சரியான நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லையென்று கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது பிரிட்டன் சமபந்தமான பாதுகாப்பு, வர்த்தகம், அந்நிய நாட்டு விவகாரம் முதலிய சகல விஷயங்களிலும் ஏகாதிபத்தியக் கொள்கையை அனுஷ்டிக்க வேண்டுமென்று கட்சி உபதலைவரும் மாஜி அந்நிய நாட்டு மந்திரியுமான அந்தோனி ஈடன் பேசினார். கைத்தொழில்கள் தேசியமயமாக்கப் படுவதை ஆட்சேபித்தார். கட்சித்தலைவர் சாச்சில் இன்றைய கூட்டத்திற்கு வரவில்லை சனிக்கிழமை அவர் வந்து கட்சிக் கொள்கை பற்றி முடிவில் முக்கியமான பிரசங்கம் செய்வார் தொழிற்கட்சி சர்க்காருக்கு விரோதமாக ஐக்கிய முன்னணி ஏற்படுத்த வேண்டுமென்றும் நாசகரமான சோஷியலிஸக் கொள்கையைத்தகர்த்தெறிய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

(ராய்ட்டர்)

சர்வதேச வர்த்தக மகாநாடு

கலந்துகொள்ள ரஷியா மறுக்கிறது

லண்டன், அக் 2

ஜினிவாவில் வகுக்கப்பட்ட சர்வதேச வர்த்தக சாசனம் பற்றி இறுதியான முடிவு செய்ய, ஐம்பது அறுபது நாடுகள் சேர்ந்து நவம்பர் 21-ம் தேதியன்று ஹாவனாவில் நடத்தும் மகாநாட்டில கலந்து கொள்ள ரஷியா மறுத்து விட்டது. (ராய்ட்டர்)

பிரிட்டிஷ் மந்திரி சபைக் கூட்டம்

ராணுவத் தலைவர்கள் விஜயம்

லண்டன், அக். 2

இன்று நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டத்திற்கு பிரிட்டனின் கடற்படை, தரைப்படை, ஆகாயப் படைத் தலைவர்கள் விஜயம் செய்திருந்தனர். பிரிட்டிஷ் கைத்தொழிலுக்கு ஆட்களை எடுப்பதற்காக பிரிட்டிஷ் ராணுவத்தைக் குறைப்பதுபற்றி ஆலோசனை நடைபெற்றதாகத் தெரிகிறது. மந்திரிகளை மாற்றியமைப்பதற்காக அடுத்த மந்திரி சபைக் கூட்டம் எப்பொழுது நடைபெறுமென்று தெரியவில்லை.

பயங்கரஇயக்கத்தை நிறுத்த கமியூனிஸ்டுகள் ஒத்தாசை

பர்மாப் பிரதமருடன் கமியூனிஸ்ட் தலைவர் சுற்றுப்பிரயாணம்

ரங்கூன், அக் 2

கொலைகளையும் பயங்கர இயக்கத்தையும் நிறுத்துவதற்கு பர்மா அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் எல்லா முயற்சிகளுக்கும் பாமாக் கமியூனிஸ்ட் கட்சி ஒத்தாசையாக இருக்கும் என்று அதன் பிரதம காரியதரிசியான தக்கின் டுன் இன்று பிரகடனம் செய்துள்ளார்.

"தேசிய முயற்சிக்கு பலத்த ஆபத்து" எனப் பயங்கர இயக்கத்தை மேற்படி கமியூனிஸ்ட் தலைவர் பகிரங்கக் கூட்டத்திலும் கண்டித்தார். "இவ்வாபத்தை முறியடித்தாலொழிய நமது சுதந்தரப் போர் வெற்றியடைய முடியாது" எனவும் அவர் தெரிவித்தார்.

தக்கின் டுன் பர்மியப் பிரதமர் தக்கின் நூவுடனும் மற்ற பாசிஸ எதிர்ப்புப் பொதுஜனச் சுதந்திர முன்னணித் தலைவர்களுடனும்கூட ஒரு சுற்றுப்பிரயாணம் செய்வார் எனவும் தெரிகிறது.

பாசிஸ எதிர்ப்பு முன்னணிக்கும் கமியூனிஸ்டுகளுக்கும் இடையே உறவுத் தொடர்புகளைச் சீர்திருத்தச் செய்வதற்குச் செய்யப்பட்ட முயற்சிகள் இதுவரை வளர்ச்சி அடைந்ததாகத் தெரியவில்லை. ஆனால் படுகொலையைத் தொடர்ந்தே முயற்சி ஆரம்பித்தது.

பர்மாவிலிருந்து உடனடுத்தலைமையில் சென்ற விசேஷ தூதுக்கோஷ்டி பிரிட்டிஷ் பொதுநல வர்த்தக நிபுணர்களுடன் தற்போது கலந்தாலோசித்து வருகிறது.

(ராய்ட்டர்)

கொரியாவும் அமெரிக்காவும்

ரஷியாவின் குற்றச்சாட்டு

மாஸகோ, அக். 2

'இஸவெஸ்டியா' பத்திரிகை எழுதுவதாவது:- அமெரிக்கா தான் கொரியா பிரச்னையில் நெருக்கடியை உண்டுபண்ணியிருக்கிறது. அது சம்பந்தமாகதனது வஸதரிப்புக்கொள்கையை மறைப்பதற்காகவே அமெரிக்க ஐக்கிய தேச ஸ்தாபனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறது. அமெரிக்கா-கொரியா நிர்வாகத்தை அமெரிக்க ராணுவ அதிகாரிகளிடமிருந்து அமெரிக்க அந்நியாட்டு காரியாலயமே நேரடியாக எடுத்துக்கொண்டிருக்கிறது. ஜப்பானிலுள்ள கைத்தொழில் வியாபார சொத்துக்கள் எல்லாம் அமெரிக்க அதிகாரிகளிடமிருக்கின்றன சோவியத் ரஷியா தனது துருப்புகளை வெளியேற்றுவதாகச் சொல்லியும் அமெரிக்கா தனது துருப்புகளை வெளியேற்றுவதாகச் சொல்லமுன்வரவில்லை இதிலிருந்து அமெரிக்கா சிறிய நாடுகள் மீது எவ்விதம் ஆதிக்கம் செலுத்த முனைந்திருக்கிறதென்று தெளிவாகத் தெரிகிறது.

[ராய்ட்டர்]

ஜப்பானிய பிரதமர் தம்பி கள்வனா?

டோக்கியோ, அக். 2

ஜப்பானிய யுத்த காலப் பிரதமர் டோஜோவின் தம்பி என்று சொல்லப்படும் கிக்குரோ டோஜோ என்பவர் நேற்று ஓர் களவு குற்றத்திற்காகக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஒரு ரயிலில் இருந்து சில பொருட்களைக் களவாடமுயன்றபோதே அவர் போலிசாரால் கைது செய்யப்பட்டார். 1938 முதல் 46 வரை அவர் வேலையின்றி இருந்ததாகவும் கடைசி மார்க்கமாகவே களவை மேற்கொண்டதாகப் போலிசார் கூறுகின்றனர். அவரது குடும்பத்தைச் சேர்ந்த நால்வரை அவர் போஷிக்க வேண்டியிருக்கிறதாம்.

இன்னோர் தம்பியான ஷிச்சியோ டோஜோ, ஓசாகா நகரின் வீதியில் நாடோடியாய்த் திரியும் குற்றத்திற்காகக் கைதுசெய்யப்பட்டான்.

மாஜி பிரதமர் டோஜோ யுத்தக் குற்றத்திற்காகக் கைதுசெய்யப்பட்டு தற்போது விசாரணை நடந்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

"எனக்கு பதக்கங்கள் அதிகரித்துவிட்டன"

90 வயது பெர்னாட்ஷா பிரலாபம்

செயின்ட் லாரன்ஸ், (இங்கிலாந்து) அக். 2

தொண்ணூறு வயதுத் தொண்டு கிழவரும் பிரசித்த நாடகாசிரியரும் அறிஞருமானபெர்னாட்ஷா அயர்லாந்து மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார். அதில் அவர் தமக்கு இனிமேல் பதக்கங்களும் பரிசுகளும் அனுப்பவேண்டாமென்று அவர் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டிருப்பதோடு, யாராவது தனக்காகக் கடவுளிடம் பிரார்த்தனை செய்ய விரும்பினால் அப்படியே செய்யும்படியும் ஆனால் அதனைத் தனக்குக் கடிதமூலம் அறிவிக்க வேண்டிய அவசியமில்லை என்றும் அவர் கூறியுள்ளார். காரணம் "எனக்குச் சொந்தக் கடிதப் போக்குவரத்துக்கு நேரம் கிடையாது."

"யுத்த கால வரி விதிதங்கள் என்னிடம் அதிகபணம் மீதப்படுவதற்கு விடுவதில்லை என்பது உண்மையானபோதிலும், எனக்குப் பணத்தால் வாங்கப்படும் பொருட்கள் எதுவும் தேவை இல்லை எனக்கு பதக்கங்கள் அதிகரித்து விட்டன ஆகையால் எனது நெஞ்சிற்கருகே இன்னும் பதக்கங்களுக்கு இடம் கிடையாது" என்று அவர் தெரிவிக்கிறார்.

[ராய்ட்டர்]

இந்தியாவின் வர்த்தகப் பிரதிநிதி

லண்டன் ஹை கமிஷனர் விருந்து

லண்டன், அக். 1

ஜினிவாவில் நடைபெற்ற சர்வதேச வர்த்தக மகாநாட்டுக்கு இந்தியாவின் பிரதிநிதியாகச் சென்றிருந்த இந்திய சாக்கார் வர்த்தக இலாகாக் காரியதரிசி ஸர் நாராயண ராகவன் பிள்ளைக்கு இன்று இந்தியா மாளிகையில் இந்தியா ஹைகமிஷனர் திரு வி. கே. கிருஷ்ணமேனன் ஓர் வரவேற்பு விருந்தளித்தார். இவ்விருந்துக்கு பிரிடிஷ் சர்க்கார்சார்ராஜ்யஉறவுமந்திரி திரு ஆர்தர் ஹென்டர்சன் உட்பட பல பிரமுகர்கள் வந்திருந்தனர்.

(ராய்ட்டர்)

குத்தகைக்கு விடப்பட்ட பிலிப்பைன் தீவுகள்

பிரிட்டன் கைவிடுகிறது

மனிலா, அக். 1

வருடமொன்றுக்கு 70 பவுண்டர்லிங்குக்குக் குத்தகைக்குவடப்பட்டிருந்த 9 தீவுகள் பிரிடிஷாரிடம் இருந்த பிலிப்பைன் அரசாங்கத்துக்கு இம்மாதம் 16-ம் தேதியன்றுமாற்றப்படும்

சூலு சுல்தானால் 1903 ம் ஆண்டுதொடக்கம் பிரிட்டிஷ் வடபோர்னியோக் கம்பனிக்கு வருடமொன்றுக்கு 300 அமெரிக்க டாலர்களுக்கு போர்டில், மனுசீ தீவுகள் குத்தகைக்கு விடப்பட்டிருந்தன.

இவற்றில் போர்டில் தீவில் 10 சீன வியாபாரிகளும் 400 சுதேசிகளும் ஜீவிக்கின்றனர் இங்குள்ள சீன வியாபாரிகள் ஆமை முட்டையும், கொப்பரு வும் ஏற்றுமதி செய்கின்றனர் மனுசீ ஜனத்தொகையோ 30 கடல் "நாடோடி"களாகும்.

(ராய்ட்டர்)

கம்யூனிஸ்ட் துறை முகம் வீழ்ச்சியுற்றது

சீன உள்நாட்டுப் போரின் நிலைமை

நான்கிங், அக். 1

சீன அரசாங்கத் துருப்புகள் சீன கம்யூனிஸ்ட் துறைமுகமான செபூவைக் கைப்பற்றி விட்டதாக அரசாங்க சார்பானவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஷாண்டுங் குடா நாட்டில் இருந்த கம்யூனிஸ்ட் படைகள் கிழக்கே 40 மைல் தொலைவுக்குப் போய்விட்டன.

கம்யூனிஸ்ட் தபால் தந்தி இதர போக்கு வரவு மார்க்கங்களும் சின்னபின்னப் படுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. (ராய்ட்டர்)

நேதன் பிரபு இங்கிலாந்து திரும்பினார்

கொழும்பு. அக் 3

பிரிட்டிஷ் விமானப் போக்குவரத்து மந்திரியாகிய லார்டு நேதன் அவர்கள் நேற்று மாலையில் நடந்த பத்திரிகா நிருபர்கள் கூட்டத்தில் பின்வருமாறு தெரிவித்தார்:- இலங்கையின் விமானப் போக்குவரத்தைப் பெருக்குவதற்கு என்னாலான உதவிகளைச் செய்ய நான் ஆயத்தமாயிருக்கிறேன.

"இலங்கையின் போக்குவரத்து மந்திரியுடன் நான் ஒற்றுமையான உறவைப் பெறுக்கொண்டேன்.

"இப்பொழுது நாங்கள் லண்டனிலிருந்து இலங்கைக்கு வாரத்திற்கொருதடவை விமானப் போக்குவரத்து ஏற்படுத்தியுள்ளோம். இன்னும் தேவை ஏற்பட்டால் இலங்கையையும் சிங்கப்பூரையும் விமான மூலம் தொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்வோம்.

'யுத்தகாலத்தில் இலங்கையில் உருவாக்கப்பட்ட ஆர். ஏ. எப். விமான நிலையங்களை நாம் உபயோகிக்க ஆவன செய்வோம்.

* * *

ரத்பலானை விமான நிலையத்தை நேதன் பிரபு பார்வையிட்டபொழுது போக்குவரத்து மந்திரியாகிய திரு. ஜே. எல. கொத்தலாவல ஒரு வரவேற்பளித்தார்.

திரு. கொத்தலாவல, நேதன் பிரபுவுக்கு ஒரு மத்தியான விருந்தும் நேற்று மத்தியானம் ஜீ. ஓ. எச். ஹோட்டலில் அளித்தார். அவ்விருந்தில் கவர்னரும் வேறுபல பிரமுகர்களும் பங்கு பற்றினர்கள்.

சென்ற திங்கட்கிழமை சிங்கப்பூரிலிருந்து இலங்கை வந்த நேதன் பிரபு, சிகிரியா, பொலனறுவை முதலிய இடங்களைப் பார்வையிட்டு இன்று இங்கிலாந்திற்குப் பிரயாணமானார்.

அத்துமீறிப் புகுந்தவர்களுக்குச் சிறைத் தண்டனை

மட்டக்களப்பு, அக். 3

எஸ். வேலுப்பிள்ளை, செல்லையா, ராசையா என்ற மூவர் மீதும் வைரமுத்து என்பவர் வீட்டில் அத்துமீறிப் புகுந்து ரூ 30 பெறுமதியான வீட்டுப் பொருட்களைச் சேதப்படுத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகளில் இருவர் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இரண்டாவது எதிரி மீது தொடரப்பட்ட வழக்குதள்ளுபடி செய்யப்பட்டது.

முதலாம் எதிரிக்கு 6 மாத சிறைத் தண்டனையும் மூன்றாவது எதிரிக்கு மூன்று மாதச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. [ந-நி]

கிரேக்க கொரில்லாக்கள் ஜூர்

ரயில்வேப் பாலம் தகர்க்கப்பட்டது

ஏதேன்ஸ், அக். 2

கிரேக்க கொரில்லாக்கள் வட கிரீஸில் உள்ள ஒரு ரயில்வேப் பாலத்தைத் தகர்த்துவிட்டார்கள். இதன் காரணமாக ரயில் போக்கு வரவு சீர்குலைந்து விட்டதென கிரேக்க செய்தி ஸ்தாபனம் கூறுகிறது.

(ராய்ட்டர்)

மைசூர் ரயில் வேலை நிறுத்தம் முடிவுற்றது

வேலை நிறுத்தத் தலைவர்கள் விடுதலையாயினர்

பங்களூர், அக். 1

செப்டம்பர் 7-ம் தேதி தொடங்கி கடந்த 24 நாட்களாக நடந்துவந்த மைசூர் அரசாங்க ரயில்வே தொழிலாளரின் வேலை நிறுத்தம் இன்றுடன் முடிவுற்றது. மேற்படி வேலை நிறுத்தத்தில் மொத்தம் 11,000 தொழிலாளர் கலந்து கொண்டிருந்தார்கள். 750 மைல் நீளமான ரயில் பாதைப் போக்குவரத்து இதனால் தடைப்பட்டுக் கிடந்தது.

தொழிலாளர் தலைவர்களுக்கும், அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் கோரிக்கைகள் சம்பந்தமாக ஒரு முடிவேற்பட்டு விட்டதாகவும் கைது செய்யப்பட்ட தொழிலாளர் தலைவர்களை அரசாங்கம் விடுதலை செய்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

ஓரிஸ்ஸாவில் ஆங்கிலக் கல்வி ரத்து

கட்டாக், செப். 30

ஓரிஸ்ஸா மாகாணத்திலுள்ள எல்லா கல்வி ஸ்தாபனங்களின் ஆரம்ப வகுப்புகளில் ஆங்கிலக் கல்வி போதிப்பதை இந்த வருஷத்திலிருந்து ரத்துசெய்து விடுவதென சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. அடுத்த வருடத்தில் மிடில் ஸ்கூல்களில் ஆங்கிலக் கல்வியை ரத்து செய்வது பற்றியும் சர்க்கார் யோசனை செய்துவருகிறது

சமாதான நீதிபதி மீது வழக்கு

காலி, அக் 1

காலி மாஜிஸ்டிரேட் திரு என் எம். ஜே ராஜேந்திரன் உடுகமைப் பகுதியில்தோல்வியடைந்த அபேட்சகரும் சமாதான நீதிபதியுமான திரு நீல் டி. அல்விஸ மீதும் இன்னும் எழுவர் மீதும் வாரண்ட் பிறப்பித்துள்ளார்.

மேற்படி 8 பேர்களும் சட்ட விரோதமாகக் கூடி பார்லிமெண்ட் அங்கத்தினர் திரு சைமன் அபயவிக்கிரமாவின் ஜீப் கார் ஒன்றைச் சேதப்படுத்தி அதன் சாரதியைத் தடுத்துவைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

இவர்களில் திலகரத்ன என்பவர் கத்தியால் எடுபன் அல்விஸைத் தாக்கியதாகவும், மற்றைய அறுவர் ஜீப்பில் இருந்த பல்வேறு பொருட்களை கழற்றிக் களவெடுத்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டிருக்கிறார்கள்.

பியூனுக்கு மீண்டும் வேலை

கொழும்பு, அக். 3

கால்பேஸ் மைதானத்தில் கடந்த மே மாதம் 28-ம் தேதி நடைபெற்ற சர்க்கார் உத்தியோகஸ்தர் கூட்டத்தில் கலந்து கொண்டதற்காக வேலையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட பியூன் ஜெயக்கொடி ஆராய்ச்சி என்னும் பியூனை திருப்பவும் வேலைக்கு எடுத்துள்ளதாக டெபுடி பிரதம காரியதரிசியின் இலாகா அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோட் மருதானை
தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும்
சனி ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்.
சித்திரகலாவின் உன்னத தயாரிப்பு!
"தாய் நாடு" தமிழ் படம்
வெற்றிகரமான 3-வது வாரம்!
அடக்கு முறைகளுக்கு ஆட்பட்டிருந்த மக்களின் மீட்சிக்காகவும் தாய்நாட்டின் விடுதலைக்காகவும் நடக்கும் பேராட்டங்களைக் கொண்டது.
மெட்ரூஸ் மெயில் புகழ் புதிய நடிகை
பாட்லிங்மணி சுந்தரி
மற்றும் பலரும் சிறப்புடன் நடித்தது
பெண்களுக்கும் சிறுவர்களுக்கும மெட்னியில் பால்கனிக்கு அரைசார்ஜ் எடுக்கப்படும்.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் அக்டோபர் மாதம் 4-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத் தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின் எடிடிட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org